சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol.13 No. 41 8-11-'42 Price 2 Annas



மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND

சந்தேகம்

ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் எழுதியது

தேசிய கவர்ன்மெண்டு அமைந்தால், யுத்தத்திற்கு இந்தியா பூரண உதவி அளிக்குமா என்று சிலருக்குச் சந்தேகம். சந்தேகம் கொள்ள, சந்தேகமே காரணம். உருவான அதிகாரத்தை மாற்ற மாட்டார்கள் என்ற சந்தேகம் ஓரிடத்தில்; மாற்றினுல் காட்டிக் கொடுத்து விடுவரோ என்ற சந்தேகம் இன்னெரு இடத்தில். சந்தேகப்பட்டுக் கொண்டே போனுல் சமாதானத்திற்கு வழியில்லை. நியாயத்தைச் சொல்லலாம்; நிலைமையை விளக்கலாம். நம்பிக்கை கொண்டால் தான் நிம்மதியுண்டு. நம்பிக்கை கொள்வதால் காரியம் கெட்டு விடுமா? கெட, இடமில்லை. ஏமாந்தவர் மறுமுறை ஏமாந்தால் என்ன கேடு? ராணுவ பலம் கைக்கடங்கிய வரையில் அதிகாரத்தை மாற்றினுல் விபரீதம் என்ன ஏற்பட்டு விடும்? சந்தேகப்பட்டுக்கொண்டாவது பரீக்ஷை பார்ப்பானேன் என்று சொல்லலாம். பரீக்ஷையில் லாபம் உண்டு. பலம் பெருக ஹேது உண்டு. பரீக்ஷையில் நஷ்டம் இல்லை. இன்றிருப்பதைவிட் நிலைமை கேவலமாக ஹேதுவில்லை.

யுத்தத் துவக்கத்தில் மாறுபட்ட அபிப்பிராயம் கொள்ள இடம் இருந்தது. நாஸிகள் ஏக சக்கிராதிபத்தியத்தை நாடினர், ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றிக்கொள்ள பிரிட்டிஷார் முனைந்தனர் என்று சொல்ல இடம் இருந்தது. இந்தியரைக் கலக்காமல் இந்தியாவை யுத்தத்தில் ஈடுபடுத்திய முறையும் சந்தேகத்தை வளர்த்தது. சுவாதீனத்திற்குப் போராடுவதாகச் சொல்லிக்கொண்டு இந்தியாவுக்குச் சுவாதீனத்தை மறுத்து வந்தது சந்தேகத்தை விளக்கவில்லை. அன்றிருந்த நிலைமை இன்று இல்லை. சீனுவும் ருஷியாவும் அமெரிக்காவும் யுத்தத்தில் ஈடுபட்டு, உயிருக்கும் உடமைக்கும் போராடி வருகின்றனர். அவர்களுடைய லக்ஷியத்தில் சந்தேகம் கொள்ள இடம் இல்லை. அதே லக்ஷியத்தை அவலம்பனம் செய்வதாகப் பிரிட்டனும் சொல்லுகிறது. அந்த லக்ஷியம் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியது. அதை நிறைவேற்ற இந்தியாவுக்கும் பொறுப்புண்டு. அதற்கு வசதி தேடவே தேசிய கவர்ன்மெண்டு கோரப்படுகிறது.

சந்தேகம் தொத்து வியாதிக்குச் சமானம். ஓரிடத்தில் முளைத்தால் போதும்; எங்கும் வியாபித்து விடும். பிரிட்டிஷ் நல்லெண்ணத்தில் பிறந்த சந்தேகம் உடன் பிறந்தவர்களிடையே பரவி விட்டது. அதிகாரம் மாறினுல் யார் வகிப்பது, எப்படிப் பகிர்ந்து கொள்வது என்ற சர்ச்சை பலப்பட்டு விட்டது. பசு மாடு வாங்கு முன், பால் சண்டை பெரிதாகி விட்டது. வேற்றுமையின் விபரீதத்தை அறியவில்லை. எது முக்கியம், எது முந்தியது என்பதைக் கவனிப்பாரில்லை. மத வேற்றுமைகள்; ஜாதி உணர்ச்சியை வளர விடவில்லை. வேற்றுமைகள் விலகுவதில், பிறருக்குச் சிரத்தை இல்லை. விலகாதவரையில் விமோசனம் இல்லை. விலக்க இந்தியர் முற்படவேண்டும். அறிவில் சிறந்தவரின் கடமை அதுதான். ராஜாஜி வெளியிட்ட திட்டத்தில் காணும் குணமும் அதுதான். குற்றம் குறை சொல்வது எளிது; எதற்கும் சொல்லலாம். காரியத்தைக் கெடுக்கவே உதவும். குணத்தைக் கிரகித்தால் தான் காரியம் கூடும். புத்திப் பிரவிருத்தி அதில் திரும்ப வேண்டும்.

வில்கியின் வெடி

நம்பிக்கை இழந்து வரும் மக்களுக்கு வெண்டல் வில்கியின் பிரசங்கம் ஆறுதல் அளிக்கும். ஆழத்தில் அடங்கிக் கிடக்கும் உண்மைகளை அறிய தர்சனம் வேண்டும். அறிந்த உண்மைகளை வெளியிடத் தைரியம் வேண்டும். இரண்டையும் வில்கியிடம் காண்கிறோம். அமெரிக்காவில் அந்தஸ்தும் செல்வாக்கும் உள்ளவர் அவர். அதனுல் அவர் வார்த்தைக்கு அதிக மதிப்பு. அமெரிக்கத் தலைவரின் அந்தரங்கப் பிரதிநிதியாக ஊர் சுற்றி வந்தார். அமெரிக்கருக்கு அறிவூட்ட அது உதவும் என்ற சபலம். நம்பிக்கைக்குக் காரணம் இவைதான்.

நம்பிக்கை நிலைக்க இது போதாது. வியாதிக்கு வைத்தியம் வேண்டும். வியாதியைக் குறிப்பிட்டால் போதுமா? வைத்தியம் செய்ய வசதியுண்டா? அதில் தான் சந்தேகம் தட்டுகிறது. வெண்டல் வில்கி இந்தியாவுக்கும் வரப் போவதாகப் பிரஸ்தாபம் இருந்தது. வரவில்லை. ஏன்? வரவை விரும்பவில்லையா? இதில் ஏதோ மர்மமிருக்கிறது. பின்னுல் தெரியவரும். இன்றைய ஊகம் நம்பிக்கையை வலுப்படுத்தவில்லை. உறங்கிக் கிடப்பவரை எழுப்பலாம்; விழித்தவரை எவ்வாறு எழுப்புவது? யுத்தத்தில் வெற்றிகாண அமெரிக்க உதவி தேவை. ஏகாதிபத்திய சிக்கல்களைச் சீராக்கத் தேவையில்லை போலும், இரண்டுக்கும் உள்ள தொடர்பை அறிய மனம் துணியவில்லை. அறிந்தவர் வாளாவிருப்பது தர்மமா?

வெண்டல் வில்கியின் கக்ஷி அதுதான். யுத்தத்தில் வெற்றி யடையவேண்டும். கிடைக்கும் வெற்றி என்றும் நிலைக்க வேண்டும். கீழ் நாட்டினர் மேல் நாட்டினர் என்று மனித வர்க்கத்தைப் பிரித்துப் பேசுவது அதற்கு வழியல்ல. ஒரு நாட்டை இன்னெரு நாட்டினர் அடக்கி யாள்வதும் வழியல்ல. புதிய சகாப்தம் பிறக்க வேண்டுமானுல் இந்த வேற்றுமைகள் விலக வேண்டும். யுத்தம் தொடங்கி மூன்று வருஷங்கள் முடிந்துவிட்டன. யுத்தம் முடியவில்லை. பாபசேஷம் பீடித்து வருகிறது. அபிசீனியா சுவாதீனம் பெற்றது. ருஷியா சகோதரத்துவம் பெற்றது. சீனு சமத்துவம் பெற்றது. குருக்ஷேத்திரத்தில் தர்மம் நிலைக்கக் காத்திருக்கிறது. பாபசேஷம் தீரவும், யுத்தம் சீக்கிரம் முடியவும், வெண்டல் வில்கி வழி காட்டுகிறுர். அமெரிக்க அதிகாரிகள் உஷாராகி விட்டனர். குறுக்கிட காலத்தை எதிர்பார்த்து நிற்கின்றனர் போலும்!

சென்றவார நிகழ்ச்சிகள்

ராஜாஜியின் திட்டம்

"தேசிய சர்க்கார் அமைப்பதில் காங்கிரஸ் உதவிசெய்ய விரும்புகிறது. அவ்விதம் அமைத்தபிறகு அச்சு நாடுகளை எதிர்த்து இந்தப போரை நடத்தவும் காங்கிரஸ் விரும்புகிறது. போர் நடத்துவதில் பிரிட்டனுடன் இருந்து போரை ஜயிக்கவும் விரும்புகிறது. காங்கிரஸ் கை கட்டி இருந்துகொண்டு ஜெர்மனியோ ஜப்பானே நாட்டை ஆக்ரமித்துக்கொள்வதைப் பார்த்துக்கொண்டிருக்க விரும்பவில்லை" என்று ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் இம்மாதம் 2-ந்தேதி மாலை மயிலாப்பூரில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் தெரிவித்தார். அவர் நாட்டிலுள்ள நெருக்கடியைத் தீர்க்க முஸ்லிம் லீக் உள்பட எல்லோரும் தமது திட்டத்தை ஒப்புக்கொள்ளவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்திப் பேசினர்.

* * * *

எல்லைப்புற காந்தி கைதி

மர்தன் ஜில்லாவுக்குள் நுழையக்கூடாதென்று பிறப்பிக்கப் பட்டிருந்த உத்தரவை மீறி எல்லைப்புறக் காந்தி கான் அப்துல் கபார்கான் மேற்படி ஜில்லாவுக்குள் பிரவேசிக்க முயன்றதற்காக சென்ற மாதம் 27-ந் தேதி கைதி செய்யப்பட்டார் என்று ஒரு அறிக்கை கூறுகிறது.

* * * *

ஆறு மாகாணங்களில் ரத்து

தற்போதைய கலவரச் செய்திகளைப் பிரசுரிப்பது சம்பந்தமாக ஆகஸ்ட் மாதம் 8-ந்தேதியன்று இந்திய சர்க்காரின் உள்நாட்டி லாகாவால் பிறப்பிக்கப்பட்ட அறிக்கை பம்பாய் வங்காளம், ஐக்கிய மாகாணம், பஞ்சாப், மத்திய மாகாணம், ஒரிஸ்ஸா ஆகியவிடங்களில் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

* * * *

எதிரிக் கடற்படை வாபீஸ்

ஸாலமன் பகுதியிலிருந்து ஜப்பானியக் கடற்படை திரும்பிச்சென்றுவிட்டதென யு. எஸ். கடற்படை மந்திரியான கர்னல் நாக்ஸ் சென்ற மாதம் 30-ந் தேதி அறிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:—

போராட்டத்தில் முதல் கட்டம் முடிந்து விட்டது. இரண்டாவது கட்டம ஆரம்பமாவதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். குடால்கனுரில் நாம் பிடித்த இடத்தைச் சிறிதுகூடக் கைவிடாமல் காத்து வருகிறோம். அங்குள்ள நிலைமை முற்றிலும் நமது ஆதிக்கத்திற்குள்ளேயே இருந்து வருகிறது. நாம் ஸாலமன்ஸுக்கு மேலும் ஸப்ளைகள் போய்ச் சேருமாறு செய்து வருகிறோம்.

* * * *

விமானக் கப்பல் நாசம்

தென் பஸிபிக்கில் ஒரு அமெரிக்க விமானந் தூக்கிக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாக நவம்பர்

(அடுத்த பக்கம் பார்க்க)

சென்றவார நிகழ்ச்சிகள்

(முன் பக்கத்தொடர்ச்சி)

1-ந் தேதி அறிவிக்கப்பட்டது. அக்டோபர் 26-ந் தேதியன்று குடால்கனுருக்கு வடக்கே 260 மைல் தூரத்தில் ஸாண்டாகிருஷ் தீவுக்கருகே அக்கப்பலை ஜப்பானிய விமானங்கள் தாக்கி மூழ்கடித்தன. அந்த விமானந் தூக்கிக் கப்பலின் பெயர் வெளியிடப்படவில்லை. அதே போராட்டத்தில் தான் "போர்டர்" என்ற அமெரிக்க நாசகாரி மூழ்கடிக்கப்பட்டது.

* * * *

ஸாலமன் போர்

ஸாலமன் தீவுகளுக்கருகே அக்டோபர் 26-ந்தேதி நடந்த போராட்டத்தில், 7 ஜப்பானிய யுத்தக் கப்பல்கள்மீது குண்டுகளும் டார்பிடோக்களும் பிரயோகிக்கப்பட்டதாக வாஷிங்டனிலிருந்து ஒரு ரேடியோ அறிக்கை வெளியாகியிருக்கிறது.

எதிரிகளைச் சேர்ந்த இரு விமானந் தூக்கிக் கப்பல்கள் சேத முற்றன. இரு யுத்தக் கப்பல்கள் மீது குண்டுகள் விழுந்தன; மூன்று குரூஸர்களுக்கும் சேதம் விளைந்தது. இப்போராட்டத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒரு விமானம் தூக்கிக் கப்பலையும், ஒரு நாசகாரியையும் இழந்தது.

யு. எஸ். படை சுமார் 100 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தியது.

* * * *

விமானப்படையுடன் புருக்கள்

இலங்கையில் இப்போது விமானப் படையினருடன் புருக்களும் அழைத்துச் செல்லப்படுகின்றன. இன்றைய யுத்தத்தில் அவை முக்கியமான வேலையைச் செய்வதற்காகவே இவ்வித ஏற்பாடு. இவை இங்கிலாந்திலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இங்கிலாந்தில் புருக்கள் இப்பொழுது விமானப் படையுடன் போய் வருகின்றன. இலங்கையிலும் அவற்றை வளர்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எதிரியின் பிரதேசங்கள் தாக்கப்படும் பொழுது புருக்களும் கூடவிருக்கின்றன. ஏதாவது துரதிருஷ்ட வசமான சம்பவம் நேருமாயின் அவை தாங்கள் புறப்பட்டு வந்த இடத்துக்குத் திரும்பப் பறந்து வந்து அபாயம் பற்றி அறிவிக்கின்றன.

இரவில் இருட்டில் குண்டு வீசும் விமானம் விழுந்து நொறுங்குமானுல் அப்போது புருக்கள் அங்கிருந்து வெளியே விடப்படுவதில்லை. தந்தியில்லாக் கம்பி ஆபரேடர் வசம் அவை இருக்கும். மறுநாட் காலைதான் அவர் அவற்றை பறக்க விடுவார். இப்புருக்கள் ஒரே மூச்சில் 600 மைல்வரை பறந்து செல்லும்.

* * * * *

அமெரிக்க விமானப்படைத் தலைவர் கருத்து

புதிய டில்லியில் சென்றம் மாதம் 29-ந் தேதி நடந்த பத்திரிகைக் காரர்கள் கூட்டத்தில் அமெரிக்க 10-வது ராணுவ விமானப் படையின் தளகர்த்தர் ஜெனரல் பிஸெல் பேசுகையில், "ஜப்பானியர் ஆச்சரியப்படும்படியான வகையில் அவர்களை முன்னேறித் தாக்குவதில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். மேலும் மேலும் இதே மாதிரி செய்ய முடியுமென்றும் நாம் நம்புகிறோம். ஜப்பானிய நகரங்கள் ஏற்கனவே தாக்கப் பட்டிருக்கின்றன; இனியும் தாக்கப்படும்" என்றி உரைத்தார்.

ஜெனரல் பிஸெல் மேலும் கூறியதாவது:—

அமெரிக்கா நடத்திய சுயேச்சைப் போராட்டத்தின்போது 'என்னைத் தீண்டாதே' என்று வரையப்பட்ட கொடிய விஷப் பாம்பின் சின்னம் உபயோகிக்கப்பட்டது. 10-வது அமெரிக்க விமானப்படை சென்ற சிறிது காலமாக இந்தப் பாம்பின் நிலைமையிலேயே இருக்கிறது. ஜப்பானியர் இதைத் தீண்ட முயற்சித்தனர்; அஸ்ஸாமில் ஒரு இடத்தை அவர்கள் தாக்கினர். அதையொட்டி மேற்படி படை நாலா பக்கங்களிலும் சரேலென்று பாய்ந்து தாக்கியதைப்பற்றி நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். நாம் ஹாங்காங்கில் இரண்டு தடவை தாக்கினேம். காண்டனை ஒரு தடவை தாக்கினேம். கம்மிங்கை நோக்கிப் பாய இருந்த எதிரியை நாம் மண்டையிலடித்தோம்.

சிட்டகாங்கையும், அஸ்ஸாமையும் ஜப்பானியர் தாக்கிய தன் நோக்கம் சீனுவுக்கும் இந்தியாவுக்குமிடையே உள்ள விமானப் போக்குவரத்து மார்க்கத்தைத் தடை செய்வதே என்று கூறப்படுவதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனுல் ஒன்று சொல்லுகிறேன். ஜப்பானியர் ஒரு நாளும் அந்த மார்க்கத்தை நிறுத்த முடியாது.

இப்பொழுது பெரிய தாக்குதலை ஜப்பானியர் ஆரம்பிப்பர் என்று எண்ணுவதற்கான அறிகுறி எதுவுமில்லை. மித்கியானு, லாய்விங், லாஷியோ இவை தான் அஸ்ஸாமை அடுத்தாற் போலுள்ள ஜப்பானிய விமானத் தளங்கள். இங்கிருந்தே அவர்கள் அஸ்ஸாமைத் தாக்கியிருக்க வேண்டும். இந்த இடங்களையெல்லாம் ஜப்பானியர் தாக்குதல் ஏற்பட்ட 24 மணி நேரத்துக்குள் நாம் தாக்கியிருக்கிறோம்.

எதிரிகளைத் தாக்க 10-வது படைக்குள்ள பெரும் வசதிகளை ஜெனரல் பிஸெல் விவரித்தார். முக்கிய ராணுவ இலக்குகளைச் சரியாகக் குறி பார்த்தே தாங்கள் நாம் தாக்குவதாக அவர் தெரிவித்தார்.

அமெரிக்க ராணுவத்தினருக்கும் இந்திய மக்களுக்குமிடையே சிநேகப்பான்மை நிலவுவதை அவர் வற்புறுத்தினர்.

சீவக சிந்தாமணி-20.

தாயும் மகனும்

★

—வ. வேணுகோபாலன்—

எழுதியது



தாயைக் காண வேண்டும் என்ற ஆசையால் சீவகன் உள்ளம் பரபரப்புற்றது. எப்போது தாயின் திருவுருவத்தைக் கண்டு வணங்குவோம் என்று அவன் மனம் ஏங்கியது, தண்டகாரணியத்தை விரைவாகச் சேர்வதற்குக் குதிரையை அம்புவேகமாகச் செலுத்தினான். தோழர் நால்வரும் நந்தட்டனுடன் சீவகனைப் பின் தொடர்ந்து சென்றனர். வீரர்படையும் மகளிர் குழாமும் பின்னே சென்றன. அரசகுலத்தில் சீவகன் பிறந்தவன் என்பது வெளியாயினமையால், நந்தட்டனுக்கு அவனைப்பற்றிக் கவலை உண்டாயிற்று. தோழர் நால்வருக்கும் சில வார்த்தைகளைச் சொல்ல எண்ணினான். நந்தட்டனுக்குப் பின்னர் தோழர் நால்வரும் குதிரைகள் மீது சென்றுகொண்டிருந்தனர், நந்தட்டன் பதுமுகனைப் பார்த்துக் கூறலானான்.

"பதுமுகா! விலை மதிப்பதற்கரிய பெரிய மணி ஒன்று மாசடைந்து கிடந்தது. அதை நீயும் தோழரும் துடைத்து வெளியாக்கிவிட்டீர்கள். உங்கள் மாலை வாழ்க. ஆனால் முன்பு போலவே சீவகன் விஷயங்களை மறையக் காத்தல் வேண்டும். அவ்வாறு செய்தால் உலகத்தையே கைக்கொள்ளலாம்; தவறினால் செல்வம் நம்மைச் சேராது, வணங்குபவருடைய கையிலும், தலையிலும், கண்ணிலும், ஆபரணங்களிலும் பகைவர் படை பதுங்கி இருக்கும். ஆதலால் அக்குற்றங்களை ஆராய்ந்து, கூடா நட்பு உடையவரை அகற்றிவிடல் வேண்டும். யாவரையும் நம்புதல் கூடாது சீவகன் மகளிரைக் கூட விரும்பினால், முதிய மங்கையரால் அம்மகளிர் ஆபரணங்களை நீக்கி, ஆராய்ந்து, நீராட்டுவித்து, புதிய ஆடைகளை உடுக்கச் செய்து பின்பு சீவகனிடம் அனுப்புக, சீவகன் அணியும் பூமாலையை, அன்னத்தின் கண்களிலும், சக்கரவாகப் பறவையின் முகத்திலும் பொருத்தி, நன்மை தீமையை ஆராய்க; மாலையில் குற்றம் இருக்குமானால், அன்னத்தின் கண்கள் சிவக்கும்: சக்கரவாகத்தின் முகம் வாடும்; தண்ணீரையும், உணவையும் கருங்குரங்கிற்கு இட்டு ஆராய்க. சிறிய பாம்பு பெரும் யானையைக் கொன்றுவிடும்; ஆதலால் பகையைச் சிறிது என்று எண்ணாமல், காத்து நடக்க வேண்டும். பல்லியைப் போன்று விடாமல் சீவகனுடன் இருத்தல் வேண்டும். தாயைப் போன்று அவனுக்கு வேண்டியவற்றைச் செய்ய வேண்டும். முனிவரைப் போலச் சீலம் முதலியவற்றை இவன் தப்பாமல் காக்க வேண்டும். ஐம்பொறியையும் அடக்கி ஆமை போன்று இருக்க வேண்டும். பகைவரைப் போல் இருந்து இடித்துக் கூறித் தீமையை அகற்ற வேண்டும். மனைவியைப் போன்று இருந்து, சீவகன் விரும்பும் இனிய உணவுகளைக் கொடுக்க வேண்டும்."

இவ்வாறு நந்தட்டன் கூறியதும் பதுமுகன், மனமகிழ்ச்சியுடன் வணங்கி, "அடியேன் அவ்வாறே காவல் செய்து நடந்து கொள்வேன்" என்று கூறி உடன் பட்டான்.

சீவகனைப்பற்றி பேசிக்கொண்டும், வனக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தும் விரைந்து சென்று தண்டகாரணியத்தில் புகுந்தனர். முதலில் சென்ற சீவகன், அவ்விடத்துச் சோலையில் குதிரையை விட்டு இறங்கி இளைப்பாறினான். தோழரும், நந்தட்டனுடன் சென்று அவ்விடத்தில் தங்கி இளைப்பாறினர். வீரர் படையும், மகளிர் குழாமும் வந்து தங்கின. மகளிரும் வீரரும், பூக்களைப் பறித்தும், சோலைக் காட்சிகளைக் கண்டும், விளையாடித் திரிந்தனர். மகளிர் கைபடுதலாலும், அவர்கள் கண்கள் நோக்குதலாலும் பூக்கள் மலர்ந்தன; மரங்கள் தளிர்த்தன. மகளிர் பறிப்பதற்கு ஏற்ப மரங்களும் செடி கொடிகளும் தாழ்ந்து கொடுத்தன.

தாபதப்பள்ளி அருகில் இருப்பதை அறிந்த சீவகன், தாயைப் பார்ப்பதற்கு ஆவல் கொண்டான். தன் உயிர்த்தோழனான பதுமுகனைக் கூப்பிட்டு, "நண்ப! அறிவிலாதவரைத் தேவியிடத்து அனுப்பினால் காரியம் வெளியாகும்; ஆதலால் நீயே சென்று தேவியாரின் நிலையையும் சமயத்தையும் அறிந்து வா" என்று கூறினான். உடனே பதுமுகன் மகிழ்ச்சியுடன் விசயை இருக்குமிடம் சென்றான். பதுமுகன் சென்றதும், சீவகனுக்குத் தாயைக் காணவேண்டுமென்ற அன்பு மிகுதியாயிற்று, உடனே அன்பால் உடல் உருக, மறைந்து, மறைந்து பதுமுகன் பின்னர், அவன் அறியாமல் நடந்து சென்றான்,

"விடியற்காலம், கனவில் என் மகன் சீவகன் வருவதைக் கண்டேன்; இடக்கண்ணும் துடிக்கின்றது; பல்லியும் நன்னிமித்தமாக ஒலிக்கின்றது. ஆதலால், சீவகன் இன்று வருவானோ?" என்று விசயை தன் அருகில் அமர்ந்திருக்கும் தவமகளிருடன் சொல்லிக் கொண்டிருந்தாள். பதுமுகன் அச்சமயம் சென்று விசயையின் பாதங்களை வணங்கிநின்று, "தேவி! ஐயன் வந்தான்" என்று கூறினான். ஐயன் என்றதும் விசயையின் உள்ளம் தளிர்த்தது. உடல் சிலிர்த்தது: "ஆ! என் ஐயன் எங்கு வந்திருக்கிறான்?" என்று ஆவலுடன் கேட்டுக்கொண்டே எழுந்து நின்றாள். உடனே சீவகன் விரைந்து சென்று, "தாயே! அடியேன் நான் தான்" என்று கூறிக்கொண்டே கையைக் குவித்து வணங்கி விசயையின் பாதத்தில் விழுந்தான். கண்களின் நீரால் விசயையின் பாதங்களைக் கழுவினான். மகனைக் கண்ட மகிழ்ச்சியால், விசயையின் கண்களிலிருந்து நீர் சீவகன் மேனியை நனைத்தது. உடனே, "ஐயனே! வருக" என்று கூறிச் சீவகனை இருகைகளாலும் அணைத்தெடுத்து மார்பு ஒடுங்கும்படித் தழுவிக்கொண்டாள். தாயும் மகனும் மெய்மறந்து உவகையோடு நின்றனர். அன்புக் கடல் இரண்டும் ஒன்றாகக் கலந்த தன்மைபோல் அவர்கள் உள்ளம் ஒன்றாகியது. 'உதிரம் உறவு அறியும்' என்பதைத் தோழர் கண்டு உள்ளம் பூரித்தனர்.

"ஐயனே! முற்பிறப்பில் நற்றவம் செய்யாத யான் தோள் வருத்தம் நீங்கினேன்: குமர! அரசனைப் போரில் விட்டு, உன்னைச்சுடுகாட்டில் போட்டு வந்த கொடியேனைப் பாதம் வருந்தப் பார்க்க வந்தாய்! உன் அன்பின் மிகுதியை என்ன என்று கூறுவேன்!" என்று கூறிக் கண்ணீர் சொரிந்தாள்.

"அரசன் இறக்கவும், நண்பர் வருந்தவும், தேவியார் வருத்தத்தே சுழலவும் யான் பிறந்தேன்; அல்லாமல், உயிருடன் இருந்து பகையை வெல்லாமலும் உயிரைப்போக்காமலும் இடையன் வெட்டிய ஓடியெறிமரம்போல் உள்ளயான், தங்களுக்குப் பெருந்துன்பத்தைத் தந்தேன்; துன்பக் கடலில் இனி அழுந்த வேண்டாம்; அதை நீக்கி விடுக" என்று சீவகன் ஆறுதல் கூறினான். அவன் வார்த்தைகளால் விசயையின் உள்ளம் குளிர்ந்தது.

"ஐயனே! உனக்குத் தாய் சுநந்தையே! யான் அல்லேன். உனக்குத் தந்தை, கந்துக்கடனே. அரசன் அல்லன்; எனக்கு உயிர்போன்ற சிறுவன் நந்தட்டனே! நீ அல்லை; ஆதலால், குமர! நீ இங்கே வா," என்று கூறிப்புன்னகையுடன், நந்தட்டனை அருகே அணைத்துக் கொண்டாள். அவனுக்கு இனிய வார்த்தைகளைக் கூறி, அவன் முடியையும், மாலையையும் திருத்தி மகிழ்வித்தாள். மயில், தன் குஞ்சுகளை இரண்டு சிறகாலும் தழுவியிருந்ததைப் போல், சீவகனையும் நந்தட்டனையும் இருகைகளாலும் அணைத்து மகிழ்ந்திருந்தாள். பதுமுகன் முதலிய தோழர்க்கு இனிய வார்த்தைகளைக் கூறி மகிழ்வித்தாள். உடனிருந்த மகளிரைக் கொண்டு சீவகன் முதலிய எல்லாருக்கும் உணவை அளித்து மகிழ்வித்தாள்.

இவ்வாறு ஆறு நாட்கள் சென்றன. சீவகனும் தோழரும் விசயையுடன் தாபதப்பள்ளியில் இருந்தனர். ஒரு நாள் விசயை சீவகன் முதலிய அறுவரையும் அழைத்துத் தனியே இருத்திச் சில வார்த்தைகளைக் கூறினாள்.

"சீவக! சில வார்த்தைகளைச் சொல்கிறேன்; மனத்தில் அவற்றைப் பதிய வைத்துக்கொள்; குறுநிலமன்னர் கன்னியரையும் வலிய அரசர்களுடைய கன்னியரையும் மணந்துகொள்ளுதல் மன்னர் முறைமை என்பர். ஆறில் ஒரு பங்கு அளவே மக்களிடம் திறைப் பொருள் பெற வேண்டும். பழம்பகையை மறத்தல் கூடாது. முள்ளைக் கொண்டு முள்ளை எடுப்பது போல், பகைவரைக் கொண்டு பகைவரை மோதச்செய்து வெற்றி கொள்ள வேண்டும். பகைவருடன் சேர்ந்து காரியம் செய்பவரைப் பிரித்து தம் பக்கம் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஒற்றர்களைக் கொண்டு ஒற்றரை ஆராய வேண்டும். மந்திரியரைக் கண்ணைப்போல் கருத வேண்டும். இவை வெற்றியை விரும்பும் அரசர்க்கு உபாயம். ஒருவன் பொருளைப் பெற்றால் வெற்றியைப் பெறலாம்; அழகைப் பெறலாம்; கல்வியைப் பெறலாம்; மதிப்பைப் பெறலாம்; பொருள், குறைந்தவரை உயரச் செய்யும்; பொருளால் பெரும் படையை உண்

(அடுத்த பக்கம் பார்க்க)

காதல் கவி

★

ஸ்ரீ ஹம்ஸா

எழுதியது

"என்னை மறந்து விடக் கூடாது கமல்பாபு" என்று உஷா மரணத்தருவாயிலிருக்கும் சமயம் சொன்னாள்.

"உஷா! கனவில் கூட அம்மாதிரி எண்ணாதே! ப்ரேமை சாஸ்வதமானது—தெய்வீகமானது—என்றும் அழியாதது! ஹா, உஷா..." என்று கமலகுமார் சொல்லிக் கொண்டிருக்கும் சமயமே உஷா நிரந்தர ஓய்வு எடுத்துக் கொள்ளக் கண்களை மூடிக் கொண்டாள்.

கமல்குமார் பி. ஏ. பாஸ் செய்து விட்டு, ஊருக்குச் சமீபத்தில் தான் வந்தான். உஷா அவனுக்கு ஒரு உற்சாக மூட்டும் கருவியாக இருந்தாள்—உற்சாகத்திலேயே அவள் அவனை விட்டுச் சென்றாள்.

கமல்குமாருடைய வாழ்க்கையின் புஷ்பம் வாடி விட்டது.

வெங்கடேசன்
மொழிபெயர்த்தது

அவன் எப்பொழுதும் விசனமாகவே இருந்து வந்தான்.—மரணத்தை வரவேற்கத் தயாராகவுமிருந்தான்.

காவியங்கள் எழுதுவதில் அவனுக்கு அதிக ஆவல். மனைவி இறந்ததும் கவி உள்ளத்தில் மாறுதல் ஏற்பட்டது—நிராசையின் தன்மை அவன் கவிதையில் வெளிப்படலாயிற்று. கமலகுமாரின் தனிப்பட்ட வாழ்க்கைக்கு கவிதை ஒன்று தான் துணையாகயிருந்தது.

அவன் குரலும் மதுரமாக இருக்கும். அவன் காவியங்கள் இயற்றி அவனேபாடும் சமயம் நண்பர்கள் திரளாகக் கூடிவிடுவார்கள் சிறிய; காலத்திற்குள்ளாகவே அவனுக்கு நல்ல பெயர் உண்டாயிற்று. கமல்குமார், நண்பர்கள் எதிரில் தான் புதிதாக இயற்றிய காவியத்தை வெளியிடும் சமயம் முகவுரை போல் "என் காவியங்கள் துக்கம் நிறைந்ததாயிருக்கும். நானோ நம்பிக்கை இழந்தவன். மரணத்தையே விரும்பிக் கொண்டிருப்பவன். ஆனால் இன்பமான வாழ்க்கையை விரும்புகிறேன்—அது எனக்குக் கிடைக்கவில்லை, கிடைக்கவும் கிடைக்காது" என்று சொவான்.

அவனுடைய அந்த தசையிலேயே சமாஜம் மாத்திரம் ஒன்றுபட்டிருந்தது. கமல்குமார் இயற்றிய ஒவ்வொரு காவிய புஸ்தகத்திலும் 'இம்மலர் உஷாவிற்கு' என்று எழுதியிருக்கும். கவிதை விஷயமாக யாராவது அவனைக் கேட்டால் "என் கவிதா தேவதை என்னை விட்டுப் போய்விட்டாள், இப்பொழுது அதன் மறைமுகமான சாயை தானிருக்கிறது. அது தான் நான் எழுதும் காவியக் கருவி" என்பான்.

அவன் வாழ்க்கைப்பாதை ஒரு நேரான வழியில் செல்லாமல பல கோணல் குறுகலுடன் சென்று கொண்டிருந்தது.

* * * *

நான்கு வருஷங்கள் சென்றன. கமல குமார் யூனிவர்ஸிடி காலேஜியில் ஆங்கில ப்ரபஸர் உத்தியோகத்திலமர்ந்திருந்தான். அவனுக்காக சிறு பங்களா மாத்திரம் ஒன்று வாடகைக்கு வைத்துக்கொண்டிருந்தான்.

ஒரு நாள் கல்லூரியிலிருந்து திரும்பி வந்த சமயம் மிகவும் புழுக்கமாக இருந்தது. காற்றிற்காக ஜன்னல்களைத் திறந்து வைக்க நேரிட்டது. அச்சமயம் பஞ்சாபி யுவதி ஒருவள் அவன் பங்களாவை நோக்கி வருவதைக் கண்டான்.

நீண்ட கூந்தல், சிரித்த முகம், காதில் நீண்ட தொங்கட்டான், அவள் அணிந்திருந்த முழுக்கை சொக்காய், பட்டு தாவாணி, ஜரிகை நிஜாரும் சேர்ந்து அவளை மேலும் அழகு படுத்தின. அதனுடன் செம்பஞ்சுக்கு அணிந்த அவள் கையில் கமலகுமாருடைய காவிய புஸ்தகமொன்று மிருந்தது.

கமலகுமாருடைய சொப்பன சுந்தரி அவன் எதிரில் வந்து காட்சி அளிப்பது போல் பங்களாவினுள் நுழைந்து கம்பளத்தின் மீது உட்கார்ந்தாள்,

கமல்குமார் சாந்த சுபாவத்துடன் "தாங்கள் யார்?" என்று கேட்டான்.

"என் பெயர் சந்திரகிரண். இந்த ஊர் பெண் கல்லூரியில் உபாத்தியாயினியாக இருக்கிறேன். எனக்குக் காவியங்களில் மிகுந்த ஆவல். நேற்று தங்கள் பாட்டுக் கச்சேரியைக் கேட்டு நான் ஆனந்தப் பரவசமானேன். எனக்குழ் வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டிருந்தது. தங்களுடைய கவிதையிலிருந்தே வாழ்க்கையின். இன்பப் பொருளொன்றை இழந்திருக்கிறீர்கள், என்று தெரிந்து கொண்டேன். அதைப்பற்றி என்னிடம் சொல்லுவதில் தங்களுக்கு ஒன்றும் சங்கோசமில்லையே?" என்று கேட்டாள் அந்த யுவதி.

"கிரண் தேவி, என் கவிதையின் பேக் கிரவுண்டில்—பின்னணியில்—ஒரு பெரிய கதை மறைந்திருக்கிறது--நான் யாரை

(11-ம் பக்கம் பார்க்க)

சீவக சிந்தாமணி

(மூன் பக்கத் தொடர்ச்சி)

டாக்கலாம்; படையால் பூமியைப் பெறலாம்; பூமியைப் பெற்றபின் பெரும் பொருள் பெறலாம்; அதனால் மோட்ச கதியைக்கூட அடையலாம்; ஆதலால், குமர! நாம், நாட்டை இழந்து பொருளும் இல்லாமல் இருக்கிறோம்; நம்மை இந்நிலையினின்றும் நீக்கி, மேல் நிலைக்கு உயர்த்தும் மந்திரியரும் இல்லை; நீ எண்ணிய காரியம் என்ன?" என்றாள்.

"அம்மா! போர்க்களத்தில், கட்டியங்காரன் பாம்பாக இருப்பான்; நந்தட்டன் கருடனாகி இருப்பான்; ஆதலால் வருந்தவேண்டாம்" என்று சீவகன் சொன்னான்.

"நந்தட்டன், கருடனோ?" என்று கூறி நந்தட்டனுடைய இரு தோள்களையும் பிடித்துக் கொண்டு, "சீவக, இவன் தோள்கள் உனக்கு பூமியைத் தந்து காக்கும்; காட்டில் ஒரு காக்கை, ஒரு பகலில் பல கோட்டான்களைக் கொன்றது. சிங்கம் இடம் அறியாமல், நரி மேல் பாய்ந்து நரிகளாகிய வலையில் வீழ்ந்து இறந்தது. ஆதலால் காலமும் இடமும் அறிந்து எக்காரியத்தையும் செய்யுங்கள். பெண்களைப்போல் தாம் நினைத்ததே நேர்மையென்று எண்ணிச் செய்யாதீர்கள்" என்று விசயை மொழிந்தாள்.

"தேவி! எம்வன்மையால் பகையைவென்று பூமியை இப்போதே பெறுவோம்; தாங்கள் கட்டளை செய்வதுதான் தாமதம்" என்றான் பதுமுகன். மற்ற தோழரும் தம் வீரம் புலப்பட மொழிந்தனர். அதற்கு விசயை மகிழ்ந்து, "சீவகா! கார்காலம் தோன்றியவுடன் முல்லை மலரும். சூரியன் தோன்றியவுடன் தாமரை மலரும். அது போலவே உன் புகழ் தோன்றியவுடன் உன் மாமன் கோவிந்தன் உள்ளம் மலரும். ஆதலால் அவனிடம் சென்று, அவன் கட்டளைப்படிப் பகையை அழிப்பதற்கு முயற்சி செய்" என்றாள்.

"அம்மா! யானும் அதுவே எண்ணினேன். இனி, நாளைக்கு இராசமாபுரம் சென்று கந்துக்கடன் முதலியவரைப்பார்த்து ஒரு நாள் தங்கி விட்டு மறு நாள் மாமனிடம் வருகிறேன். நீங்கள் இப்பொழுதே என் மாமனிடம் செல்லுங்கள்" என்று சீவகன் சொன்னான், உடனே விசயை சீவகனைத் தழுவி விடைபெற்றுத் தன்னுடன் இருந்த தவமகளிருடன் கோவிந்தராசன் [விசயையின் சகோதரன்] இருக்கும் விதைய நாட்டை நோக்கிச் சென்றாள். சீவகன் விசயையுடன் சென்று சிறிது தூரம் வழியனுப்பியபின் தோழர்களிடம் வந்து சேர்ந்தான்.

சீவகனும் தோழரும் வீரர் படையுடன், ஏமாங்கத நாட்டிற்குப் புறப்பட்டனர். ஆறுகள், மலைகள், காடுகள் முதலியவற்றைக் கடந்து ஏமாங்கத நாட்டை அடைந்தனர். அந்நாட்டின் புறநகர்ச்சோலையில் யாவரும் தங்கி பாடி வீடு அமைத்துக்கொண்டனர். உடன் வந்த மகளிர் உணவு சமைத்தனர். யாவரும் உணவு உண்டு மகிழ்ந்து உலாவினர். மகளிர் பாடிய கீதத்தைக்கேட்டு மகிழ்ந்த வண்ணம் அன்றிரவு அங்கேயே சீவகன் உறங்கினான். நந்தட்டன் முதலியவர் தத்தம் இடத்தில் உறங்கினர்.

மறுநாள், காலையில் சீவகன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு இராசமாபுரத்திற்குத் தனியே போய்வரப் புறப்பட்டான். தோழரிடம் விடைபெற்று நீங்கி, இராசமாபுரத்தில் குடிந்து நகர்க் காட்சிகளைப் பார்த்த வண்ணம் வீதி வழியே நடந்து சென்றான். அவ்வீதியில் சாகரதத்தன் என்னும் வணிகருடைய மாளிகையில் அவன் பெண் விமலை பந்தாடிக் கொண்டிருந்தாள். அப்பந்து தவறி, வீதியில் போகும் சீவகனுக்கு முன்பு வீழ்ந்தது. பந்தை எடுப்பதற்கு ஓடிய விமலை, சீவகனைக் கண்டு அவன் மீது காதல் கொண்டாள், விமலையைக் கண்ட சீவகனும் காதல் கொண்டான். விமலை மாளிகையின் ஓர் புறத்தில்போய் நின்று சீவகனைப் பார்த்து வருந்தி நின்றாள். சீவகன் விமலையிடத்துள்ள காதலால் அவளை எண்ணி, அம்மாளிகையில் பண்டங்களை விற்றுக் கொண்டிருந்த சாகரதத்தனுக்கு அருகில் போய் உட்கார்ந்தான். சீவகன் உட்கார்ந்த சிறிது நேரத்திற்கெல்லாம், கடையில் இருந்த பண்டங்களெல்லாவற்றையும் சாகரதத்தன் விற்று விட்டான்: எதிர்பாராத அளவு பொற்காசுகள் பெருகின. அதைக் கண்ட சாகரதத்தன் பெரும் மகிழ்ச்சியோடு அருகில் இருந்த சீவகனைத் தழுவிக் கூறலானான்:—

"வீரனே! செல்வம் பெருக வந்த செல்வா! என் மனைவி கமலைக்குப் பிறந்தவள் விமலை; அவள் பிறந்தவுடன் சாதகத்தைச் சோதிடர் கணித்தனர்; 'என் கடையில் பண்டங்கள் விரைவில் விலையாகாமைக்குக் காரணம் என்ன?' என்று கேட்டேன். அப்போது ஒரு சோதிடன் 'உன் மகளுக்குக் கணவன் உன் கடைக்கு வருவான். அப்போதே பண்டங்கள் விற்கப்பட்டுப் பொருள் சேரும். அவனே உன் மகளுக்குக் கணவன்' என்றான். அவன் கூறியபடி இன்று பண்டம் விற்றுப் பெரும் பொருள் சேர்ந்தது; ஆதலால் விமலையை நீயே மணம் செய்து கொள்ள வேண்டும்" என்றான். சீவகன் உடன் பாட்டைத் தெரிவித்தான். சாகரதத்தன் சீவகனை உள்ளே அழைத்துச் சென்று உபசரித்தான். அந்நிகழ்ச்சியைக் கண்ட விமலை உடல் பூரித்தாள். அன்றே, விமலைக்கும் சீவகனுக்கும் சிறப்பாக மணம் நிகழ்ந்தது. சீவகன் விமலையுடன் மகிழ்ந்து அன்று இரவு பொழுதை போக்கினான்.

தான் எண்ணிய காரியங்களை முடிப்பதற்கு எண்ணிய சீவகன் மறு நாள் விமலையிடம் "சோலையில் என் தோழர் இருக்கின்றனர். அம்பு போல் சென்று தோழரைக் கண்டுவிட்டு வருகிறேன்" என்றான். சீவகன் பிரிவிற்குச் சிறிது வருந்திப், பின்னர் விடை கொடுத்தாள். விமலையைத் தேற்றி அவ்விடம் விட்டு தோழர் இருக்குமிடத்தைச் சீவகன் அடைந்தான்.

அடுத்த வாரம்:—காம திலகன்

வாடா மலர்

முன் கதைச் சுருக்கம்

பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன் சாத்தன்: வெளி நாடுகளுடன் வர்த்தகம் நடத்தி வந்தான் அவன். “திரைகடலோடியும் திரவியம் தேடு” என்ற முதுரையை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தவன். யவன தேசத்திற்கு அடிக்கடி சென்று வந்தான். அவன் பார்ப்பதற்கு வசீகரத்தோற்றம் உள்ளவன்: அலக்ஜாந்திரியாவில் அவன் ஒருத்தியைக் கண்டான்: அது முதற்கொண்டு அவனது உள்ளம் அவளிடத்தே ஈடுபட்டு விட்டது. அவள் யார்? அவளது பூர்விகம் என்ன? — இதற்கப்புறம் கதையை மேலே படியுங்கள்!

புதிய தொடர் கதை

தி. நா. சுப்ரமணியம் எழுதியது

2

“என்ன, எலுமிச்சம் பழத்தின் அளவு பெரிதாக இருக்கிறதே? இது அசல் முத்துத்தானா?”

“கொற்கைக்குப் பக்கத்தில் கடலில் குளித்து எடுத்தது. இதைவிடப் பெரிய முத்துக்களும் எங்கள் நாட்டில் இருக்கின்றனவே.”

போண்டியாஸுக்குத் தன் கண்களையே நம்பமுடியவில்லை. அவன் அந்த முத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். வலது கையிலிருந்து இடது கைக்கும், பிறகு வலது கைக்கும் ஆக அந்த மாற்றி மாற்றித் தூக்கிப் பார்த்தான். அது ஒன்றே அவன் மனதைக் கவர்ந்தது.

“இந்த அழகிய சல்லாவைப் பாருங்கள். எவ்வளவு மெல்லியதாக நெய்யப்பட்டுள்ளது?”

சாத்தன் தான் கொணர்ந்திருந்த மற்றப் பொருள்களையும் இவ்விதமே ஒவ்வொன்றாகப் புகழ்ந்துகொண்டே போனான். ஆனால் போண்டியாஸுக்கோ அவை காதில் விழவேயில்லை. அவன் அந்த ஒற்றை முத்தையே நோக்கிக் கொண்டிருந்தான். அவனுடைய மனம் எதையோ யோசித்து வந்தது. அந்த முத்தை நடுவில் வைத்து இருபுறங்களிலும படிப்படியாக அளவில் குறையும் முத்துக்களைக் கோத்து ஏன் ஒரு மாலை செய்யக்கூடாது என்றே எண்ணினான். அத்தகைய மாலை அந்தோனியாவின் சிவந்த நிறத்துக்கும் திறந்த கழுத்துக்கும் எவ்வளவு எடுப்பாக விளங்கும் என்பதைத் தன் மனக்கண்ணாலே உருவகப்படுத்திப் பார்த்தான் அவன்.

சாத்தனும், பழக்கத்தால் முடுக்கிவிடப்பட்ட யந்திரம் போல, தன் பொருள்களைப் புகழ்ந்துகொண்டு போனானே ஒழிய, தான் சொல்லி வந்த விஷயத்தைப் பற்றிச் சிறிதும் சிந்திக்கவில்லை. அவன் கண்கள் அந்த அறையைச் சுற்றிச் சுற்றிச்சுழன்று எதையோ - இல்லை! - யாரையோ தேடிக்கொண்டிருந்தன. அவன் அந்தோனியாவைத்தான் அப்படித் தேடினான். அவள் அங்கே இல்லை. ஆயினும் அவள் எந்தச் சமயத்திலும உள்ளே நுழையக் கூடும் என்பதை எண்ணி அவள் வரவை எதிர்பார்த்து ஏங்கியிருந்தான்.

அவன் வாயும் கண்ணும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் நடந்து கொண்டது போலவே அவன் மனமும் வேறொன்றைப் பற்றிச் சிந்தித்தது. சென்ற வருஷத்தில் அவன் அந்தோனியாவுடன்கூடிக் கழித்த இன்ப நாட்களைப் பற்றிய கனவு கண்டிருந்தது.

சென்ற வருஷத்தில் நாகனும் சாத்தனும் அந்தோனியாவை நகர்ப்புறத்தே பார்த்த அன்றைத்தினம் அவர்கள் இறங்கியிருந்த ஜாகைக்குத் திரும்பி வருகிறவரையில் நாகன் அவளைப்பற்றி அநேக விஷயங்களைச் சாத்தனுக்குச் சொல்லிக்கொண்டே வந்தான். நாகனுக்கு அந்த நகரத்துப் பிரமுகர்கள் எல்லோரையும் நன்றாகத் தெரியும். அதுமட்டுமன்று. அவர்களில் ஒவ்வொருவருடைய பூர்வோத்தரங்களையும் விருப்பு வெறுப்புக்களையும் அவன் அறிவான.

புரோக்யூரேடராக ரோம ஸாம்ராஜ்யத்தின் பிரதிநிதியாக அலெக்ஜாந்திரியாவில் ஆண்டு வந்த போண்டியாஸைப்பற்றியும் அவன் குமாரத்தி அந்தோனியாவைப்பற்றியும் நாகன் கூறிவந்த விஷயங்களிலிருந்து சாத்தன் கிரஹித்துக் கொண்டது அதிகம் இல்லை. சாதாரண வியாபாரியும் அந்நியதேசத்தவனுமான தனக்கு அவளுடைய பழக்கம் கிட்டாது என்பதே அவன் தெரிந்துகொண்டது.

கிட்டாப்பழத்தைக் குறித்து ஏங்குவதில் பயனுண்டோ? அதனால் அவன் அந்தப் பெண்ணை அறவே மறக்க முயன்று வந்தான்; ஆனால் முடியவில்லை.

அவன் மனோ நிலை எப்படியிருந்தால் என்ன? அவன் தன் நாடுவிட்டுப் பிறநாட்டுக்கு எதற்காக வந்தானோ, அந்தக் காரியத்தை மறக்க முடியுமா? அவன் வியாபாரத்துக்காக வந்தவன். தான் கொணர்ந்த சரக்குகளை அங்குள்ளவர்களுக்கு விற்பனை செய்து, பதிலுக்குத் தமிழ் நாட்டார் விரும்பும் பொருள்களைப் பெற்றுப் போகவேண்டும்; வியாபாரத்திலே தீவிரமாக முனைந்தால் அவளைப் பற்றிய எண்ணத்தை மறக்க முடியுமோ என்றும் ஒரு கால் எண்ணினான் போலும்!

அவர்கள் அதிக நாள் அங்கே தாமதிக்க முடியாது. அவர்கள் பிரயாணம் பருவக் காற்றைப்பொருத்தது. காற்று அநுகூலமாக அடிக்கும் காலத்திலே ஊர் திரும்பிவிடவேண்டும். காற்றின் திசை மாறிவிட்டால், படகுகள் கடலில் செல்லமாட்டாமல் ஆட்டங்கொண்டு மூழ்கிவிடவும் நேரிடலாம். அன்றி, விற்பனை செய்யாமல் சரக்குகளைத் திருப்பிக் கொண்டுபோவதைவிட வேறு அவமானம் உண்டோ?

அவர்கள் கொணர்ந்த சரக்குகளை வாங்கக்கூடியவர்களை நாகனே நன்றாக அறிவான். அதனால் அவன் ஒருநாள் சாத்தனையும் அழைத்துக்கொண்டு அண்டியோகஸ் வீட்டுக்குப் போனான்.

அண்டியோகஸ் அந்த நகரத்துப் பிரமுகர்களில் ஒருவன். பெரியப் பணக்காரன் அவன் தந்தை ரோம ஸாம்ராஜ்யத்தின் அதிபதிகளுள் ஒருவனாக இருந்து ஏராளமான பூமியும் பொருளும சேர்த்து வைத்திருந்தான். அண்டியோகஸ் தந்தைக்கு ஒரே மகன். அதனோடு நல்ல இளம் வயது. காளைப் பருவம வாய்ந்தவன். அடிமைகளை அதட்டி, வேலை வாங்கி, நிலங்களைப் பயிர் செய்து பிதிரார்ஜிதத்தைக் கொண்டு காலம் கழித்து வந்தவன்

சைன்யத்தின் தலைமைப் பதவி ஒன்றும அவனுக்கு இருந்தது. ஆயினும அவன் கொஞ்ச காலமாகப் போர்க்களங்களுக்குப் போகவில்லை. தலைமுறை தலைமுறையாகப் பேரும் புகழும கிடைத்து விட்டன. அவன் கீழ் கைகட்டிச் சேவகம் புரியும் வேலைக்காரர்களும அடிமைகளும் பலர் இருந்தனர்: சுக ஜீவனம செய்து வந்தான்

அந்தக் காலத்தே ரோம ஸாம்ராஜ்யத்தைப் பற்றியிருந்த மோகம் அவனையும் பிடித்திருந்தது. அந்த மோகத்துக்கு அவனையே முதல் அடிமை என்றும் சொல்லலாம். கவலையில்லா வாழ்க்கையை நடத்திய அவனுக்கு, விலையுயர்ந்த, கிடைத்தற்கரிய பொருள்களைப் பெறுவதில் ஆசை உண்டானது இயற்கையே.

நாகனும் சாத்தனும் கொணர்ந்திருந்த சாமான்களை ஒவ்வொன்றாகப் பார்த்து மகிழ்ந்தான் அண்டியோகஸ். எதைப் பார்த்தாலும் அதனை வாங்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது அவனுக்கு ஆனால் அவனோ எதை வாங்குவது என்பதை அறியாமல் திகைத்தான்.

‘அந்தத் தந்த யானை வெகு நேர்த்தியாக இருக்கிறதே’ என்று கூறிக்கொண்டே உள்ளே நுழைந்தாள் ஒரு பெண.

‘யார் அந்தோனியாவா? நல்ல சமயத்திலதான் வந்தாய் வா இவற்றைப் பார் எது உனக்குப் பிடித்திருக்கிறது சொல்’ என்று உள்ளப் பூரிப்புடன் சொன்னான் அண்டியோகஸ்.

அந்தோனியா மிக்க கம்பீரத்துடன் அந்த விசாலமான அறையுள் நுழைந்து வந்து பக்கத்தில் உட்கார்ந்தாள். அந்த அறையைச் சுற்றி ஒரு தரம் தன் பார்வையைச் செலுத்தினாள். பிறகு மெதுவாக அந்தத் தந்த யானையைக் கையில் எடுத்துக் கொண்டாள். ஆனால் அவள் பார்வையோ அந்த யானையை நோக்கியதாக இல்லை: எதிரில் உட்கார்ந்திருந்த இளந்தமிழன் சாத்தனைக் குறித்ததாகவே இருந்தது

சாத்தனுக்கு உடல் வியர்த்துவிட்டது. அவன் ஹிருதயத்தை யாரோ கனமான பாறை ஒன்றை வைத்து அமுக்குவதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. தன் எதிரில் உட்கார்ந்திருக்கும் அந்த யவனப் பெண்ணைப் பார்த்து அவள் அழகைப் பருக ஏங்கியது அவன் உள்ளம். ஆனால் அவளை ஏறிட்டுப் பார்க்க அவனால் முடியவில்லை. தலை குனிந்து உட்கார்ந்திருக்கவும் கூடவில்லை அவன் தொண்டை வறண்டு போயிற்று. உதடுகளைச் சேர்த்து நாக்கைக் கூட்டி உமிழ் நீரை விழுங்கித் தொண்டையை நனைத்துக்கொள்வதும், இடையிடையே தலைநிமிர்ந்து கடைக்கண்ணால் அவளைப் பார்ப்பதுமாகத் தான் பொழுதைக் கழித்தான்.

அவன் நிலை கவிழ்ந்துவிட்டது. அவன் யாரைப் பார்க்கப் பயந்தானோ, யாரை மறக்க முயன்றானோ, அவளே எதிரில் வந்து உட்கார்ந்து அவனையே கூர்ந்து கவனித்தாள். தெய்வம் தன்னை இப்படியும் சோதிக்க வேண்டுமா என்ற கவலையுடன், கல்லாய்ச் சமைந்துவிட்டான் அவன்.

அன்றைத்தினம் வியாபாரம் முழுவதையும நாகனே பார்த்துக்கொண்டான். சாத்தன் வாய் திறந்து ஏதும பேசவில்லை. அவனுடைய மௌன நிலையே அந்தோனியாவை அவனிடம இழுத்தது. அவள் தன் கண்களைச் சாத்தனைவிட்டு எடுக்கவேயில்லை அவனும நாகனைப்போல வாய் திறந்து பேசி, வியாபாரத்தை நடத்தியிருந்தானாகில் அவள் அவனை அதிகமாகக் கவனித்திருக்கமாட்டாள் போலும்.

கடைசியில் நாகனும் சாத்தனும விடைபெற்றுக்கொண்டு எழுந்தார்கள்

“இவர் யார்? நீங்கள் ஏன் நம் மாளிகைக்கு வரவில்லை! நாளைக்காவது வாருங்கள்”

அந்தோனியா இவ்விதம சொன்ன வார்த்தை கூரிய ஈட்டி போல சாத்தனைத் தாக்கியது. ஏற்ற பதில் சொல்ல அவனால் முடியவில்லை.

நாகன். நல்ல பயிற்சியுள்ளவன. பேசுவதில சமர்த்தன், ‘அவ்விடத்து ஸௌகரியம பார்த்து வரவேண்டும என்று இருந்தோம். தாங்கள் சொல்லிவிட்டால் போதும். நாளைய் தினம் கட்டாயம் வருகிறோம்’’ என்று சட்டென்று பதில் அளித்துவிட்டான.

சாத்தன் நடந்துகொண்ட விதத்தைப பற்றி அன்று முழுதும் நாகன் செய்த பரிகாசத்துக்களவேயில்லை, சாத்தன் என்ன மறுமொழி சொல்ல முடியும்? தன் மனக்கிளர்ச்சியை மறைக்கப பார்த்தான். ஆனால் முடியவில்லை. பீறிக்கொண்டு அது

வெளிவந்து தோற்றம் அளித்தது.

மறுநாள் சாத்தன் புரோக்யூரேடர் மாளிகைக்குச் சென்றான். அதற்குத் தூண்டுகோல் வேறு வேண்டியிருக்கவில்லை. நாகனும் உடன் சென்றான். சாத்தனுக்கு முதல் நாள் இருந்த லஜ்ஜை சிறிது குறைந்தது அவ்வளவு பரபரப்பும் இல்லை. கோழைத்தனத்தை உதறித் தள்ளி, ஸகஜமாகப் போண்டியஸுடனும் அந்தோனியாவுடனும் பழகி வந்தான்.

சாத்தன் அன்றைக்கு அந்த மாளிகையில் ஒரு ஜாமநேரம் கழித்தான் பொழுது போனதே தெரியவில்லை. உல்லாஸப்பேச்சுகளுக்கு நடு நடுவிலே திராக்ஷைப் புளிரஸமும் சிற்றுண்டிகளும் வந்துகொண்டே இருந்தன. அந்தோனியா அவற்றை எடுத்துப் பரிமாறினாள். அதுகாறும் தனக்குக் கிடைக்காத பாக்கியம் கிட்டியதாகவே கருதினான் சாத்தன்.

முதற் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. அப்பால் அவனுக்கு அங்கே போய் வருவதில் கஷ்டமில்லை. அவர்களும் அவனை அங்கே வந்து போகும்படி அடிக்கடி கேட்டுக்கொண்டே இருந்தார்கள். அவனுக்கும் ஏதாவது காரணங்கள் முளைத்துக்கொண்டே இருந்தன. ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்ற நோக்கம இருக்கும போது அதற்குக் காரணங்களை ச்ருஷ்டிப்பது ஒரு பெரிய காரியமா?

அந்தோனியாவும் சாத்தனும ஒருவரையொருவர் நன்றாக அறிந்துகொண்டனர்; நெருங்கிப் பழகினர். ஒருவருடைய விருப்பு வெறுப்பை மற்றவர் நன்கு அறிந்திருந்தனர். நாளடைவில் அந்தப் பழக்கம் காதலாக மிளிர ஆரம்பித்தது

அதனை, அவ்விருவரும் அப்போது சரியாக உணரவில்லை. சாத்தனோ அவளைத் தனக்குக் கிடைக்கக்கூடியவளாக கருதவில்லை. அந்தோனியாவோ அதுவரைக் காதல என்பது என்ன என்பதையே அறியாமல இருந்து வந்தாள். அதனால் அவள் சாத்தனுடன் பழகும்போது தனக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளைப்பற்றி அதிகம கவனிக்கவில்லை.

அந்த வருஷம். சாத்தன் தமிழ் நாடு திரும்பிய பிறகுதான் அவர்கள் அதனை அறிந்தனர். அந்த யவனப் பெண்ணை விட்டுத் தனியாகக் காலம கழிக்க முடியாது என்பதைச் சாத்தன் உணர்ந்தான்.

அழகிலோ, குணத்திலோ, செல்வத்திலோ, அவளை ஒத்த பெண்கள் தமிழ் நாட்டில கிடையாதா? எந்த விதத்திலும் அந்தோனியாவுக்கு மேம்பட்டவர்கள் என்று சொல்லக்கூடிய பெண்கள் இருக்கத்தான் இருந்தார்கள். ஆனால் சாத்தன் அவர்களைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை.

காதலுக்குக் கண்ணில்லை என்று சொல்லுவர். அன்றி அது செல்லும் வழியும் கரடுமுரடானதே. அந்தத் தெய்வ ஸ்ருஷ்டியின் ரகசியத்தை யார் அறிவர்?

அந்தோனியாவைப் பார்க்காமல் அவனால் இருக்கமுடியவில்லை. அவளை எப்போது கண்டு ஆனந்திக்கப் போகிறோம என்று துடித்துக் கொண்டிருந்தான். அவன் வேறு என்ன செய்வான்? கப்பலை விட்டு இறங்கியவுடனே நேராகப் போண்டியஸ் மாளிகைக்கு வந்து விட்டான்.

அவன் சம்பிரதாயங்களை மறந்தான். வாணிபத்துக்காக வருபவர்கள் புரோக்யூரேடருக்கு முன்னதாகத் தகவல் கொடுத்து அவருடைய ஸௌகரியத்தை அறிந்து போவர். ஆனால் சாத்தன் வாணிபத்துக்காகவா வந்தான்.!

அவன் இந்தத் தட்வை எவ்வளவு ஆத்திரத்துடன் அந்தோனியாவைக் காணச் சென்றானோ அவ்வளவு ஏமாற்றம் அடைந்தான். அவனுடைய ஆசை நிராசையாயிற்று அங்கே அதிக நேரம் தாமதித்துப் பார்த்தான். அந்தோனியா வரவில்லை.

அவன் மனத்தே எண்ணங்கள் உண்டாகிப் புழுங்கின. ‘அவள் ஏன் வரவில்லை. எங்கேயாவது போயிருப்பாள்......ஒரு கால் அவளுக்கு ஏதாவது...’ மேலே யோசிக்க அவன் மனம் மறுத்துவிட்டது.

ஒருகால் அண்டியோகஸ் அவளை அழைத்துச் சென்றிருப்பானோ? அவன் அந்தோனியாவின்மீது ஒரு கண் வைத்திருந்தான என்பதைச் சாத்தன் அறிவான. அவன் அவளைச் சுற்றிச் சுற்றி அலைந்து கொண்டிருந்தான். அப்படியானால் அவளும அவனை நேசிக்கிறாளா? சாத்தன் ஊரில இல்லாத காலத்தில் அவளுக்கு மன மாறுதல் ஏற்பட்டு விட்டதா?

சாத்தன் உள்ளத்தே பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. நாழிகையும ஆகிவிட்டது அதற்கு மேல அவன் போண்டியஸ் மாளிகையில் தங்குவதற்கு முடியுமா? சில சமயங்களில் அசம்பாவிதமாகவும போய் விடக்கூடும். வேறு வழியில்லாமல் அவன் கடைசியில் வீடு வந்து சேர்ந்தான்.

அந்தோனியா உண்மையில் அன்றைக்கு அண்டியோகஸுடன் பக்கத்தே கொஞ்ச தூரத்தில் இருந்த சிங்காரத் தோட்டத்துக்குப் போயிருந்தாள். ஆயினும் இவள் சாத்தனை மறந்து விடவில்லை. அவனைக் காணப்போகும நாளை கணக்கிட்டுக் கொண்டு தான் இருந்தாள்.

காற்று நன்றாக அடித்த விஷயம அவளுக்குத் தெரியுமா? வழக்கத்துக்கு மாறாகத் தமிழ் நாட்டு வணிகர்கள் இந்த வருஷம் சீக்கிரம் வந்து விட்டார்கள. இதனை அறியாமலே அவள் அண்டியோகஸுடன் போயிருந்தாள்.

அவர்கள் வந்த செய்தியைக் கேட்டவுடன் அந்தோனியா ஆண்டியோகஸ் ஆகிய இருவரும இரு வேறு விதமான உணர்ச்சிகளை அடைந்தனர். அந்தோனியா சந்தோஷத்தால் உள்ளம் மலர்ந்து ஆனந்தக் கூத்தாடினாள். அண்டியோகஸோ மனம் வெதும்பி வாடி உலர்ந்து விட்டான்.

அவன் சாத்தனைத் தன் விரோதியாகவே கருத ஆரம்பித்து விட்டான். அவன் வராமல் இருந்தால் அந்தோனியா மனத்தில் எவ்வித மாறுதலும இன்றி தன்னைக் காதலித்திருப்பாள் என்றே அவன் உறுதியாக நம்பினான்.

‘ஒருகால் சாத்தன் இந்த வருஷம் வராமல் இருந்திருக்கலாகாதா. ஏன், இடைக்காலத்தில் அவனுக்கு இடையூறு ஏதேனும் ஏற்பட்டிருக்கலாமன்றோ?’ இவ்விதம் எண்ணித் தன் மனத்தைச் சமாதானம் செய்துகொண்டாலும், அவனையும் அறியாமல் அவனுக்கு ஏதோ ஒரு ஏக்கம்—நடுக்கம்—ஏற்பட்டிருந்தது. சாத்தன் நிச்சயமாக வந்துவிட்டான் என்று யாரோ அவன் காதுகளில் உரைத்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது ஆண்டியோகஸுக்கு.

அந்தோனியா விரைவாகத் தன் மாளிகையை அடைந்தாள். ஆயினும், அவள் பயப்பட்டபடியே நேர்ந்துவிட்டது. சாத்தன் அதற்கு முன்னமே வந்து போய் விட்டான். தன்னைக் காணமல் அவர் என்ன நினைத்துக்கொண்டாரோ என்றே கவலைப்பட்டாள். அன்றி, ஆண்டியோகஸுடன் தான் சென்றிருந்த விஷயத்தை அவர் அறிந்திருப்பாரோ! அதனால் கோபித்துக் கொள்வாரோ!’ என்றும் ஏங்கினாள்.

அவரை மீறுபடியும் கண்டு தன் நிலைமையை விளக்கிக்கூறி மன்னிப்பைப் பெறும்வரையில அவளுக்கு மன நிம்மதி ஏற்படுமா ?

(தொடரும்)

அட்டைப் படம்

பிரபல நடிகை மீனலோசனி.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய் துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனே இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

கர்ப்பத்தைத்தடுக்க ‘ரஹாத்’

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

டோங்ரே
பாலாமிருதம்
பலஹீனமான குழந்தைகளுக்கு
விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

இசை செய்த சூழ்ச்சி

சிவ சுப்ரமண்யன் தன் கலா மந்திரத்திற்குள் நுழைந்து, அவ்விடம் வீற்றிருந்த ஆசிரியர் ஆனந்தராவை நோக்கி "ராவ்! அடுத்த மாதம் வரும் நவராத்திரிக்கு காந்தாமணியை நம் கலாக்ஷேத்திரத்திற்கு அழைத்து துர்க்க பூஜையை சிறப்பாய் நடத்தி, காந்தாமணியின் சங்கீத கச்சேரியை நடத்தலாமென்றிருக்கிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாட்டை செய்யும்" என்று சொல்லிச் சென்ருர்.

சிவசுப்ரமண்யன் சங்கீத ரஸிகன்: கலோபாஸி; தயை பொழியும் கண்கள்: மேகத்தினுள் ஆழ்ந்திருக்கும் சந்திரனைப்போன்ற முகமுடையவன்: நெற்றியில் சோகத்தின் சுருக்கங்கள்; மனோவேதனையின் மௌன முத்திரையை தரித்த அதரங்கள்: சோர்வுள்ள நடை: தயாளூபி: சிவசுப்ரமண்யனின் சுயபிரயத்தினத்தினுல் ஏற்படுத்தப்பட்ட கலா மந்திரத்தில் இன்று கணக்கற்ற ஆண்பெண் வித்தியார்த்திகள் பயிலுகின்றனர், கலாமந்திரத்தில் முக்கியமாய் சங்கீதமும், சித்திரக் கலையுமே அதிகம் கற்க வந்தனர் மாணவ மாணவிகள். கலாமந்திரத்தில் பயின்றவர்கள் எங்கு சென்ருலும் போற்றப்பட்டனர்.

எங்கு கண்டாலும் கலா மந்திரத்தின் துர்க்க பூஜா கொண்டாட்டத்தைப்பற்றிய விளம்பரங்கள்! காந்தாமணியின் சங்கீதக் கச்சேரியை கேட்க ரஸிகர்கள் திரளாய்ச் சேர்ந்தனர். காந்தாமணியிடம், காரியதரிசி முதல் கார் ஓட்டுவது வரை பெண்ணினங்களே! அல்லி ராணிக்குப்பின் காந்தாமணி ஒருவளே, அப்படி ஆண் வாடை அருகிலும் வரக்கூடாமல் வைராக்கியமாய் இருந்தாள்.

அன்று மஹா நவமி, சரஸ்வதி பூஜை. கலாமந்திரத்தில், துர்க்கா, லக்ஷ்மி. ஸரஸ்வதி, மூன்று விக்கிரஹங்களுக்கும் அழகுபெற அலங்கரித்து மந்திர வாஸிகள் கோலாஹலமாய் பூஜையை கொண்டாடினுர்கள். மாலை காந்தாமணியின் சங்கீதக்கச்சேரி, கலாமந்திரத்திற்கருகாமையிலிருந்த ஊர்களிலிருந்து ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் வந்து மந்திரத்தின் கொட்டகைக்குள் சேர்ந்தனர். தேவிகளின் சன்னிதானத்திற்கருகில் ஓர் மேடை அதியத்புதமாய் அலங்கரிக்கப்பட்டு. அதில் அழகுடைய பெண்கள் நால்வர் வீற்றிருந்தனர். அந் நால்வரில் "அழகி யார்?" என்று கேட்கப்படுமாயின் "அழகில்லாதவள் யார்?" என்ற பதில் கிடைக்கும்.

ப்ரேக்ஷகர்கள் அதிகானந்தத்துடன் வீற்றிருந்தனா. பக்கவாத்திய பெண்மணிகள் சுருதி இயற்றிக்கொண்டு பாடகியின் முகத்தை நோக்கினர். பாடகி மெல்ல அஸாவேரி ராகத்தை ஆலாபனை செய்யத் தொடங்கினுள். சபை முழுவதும் நிசப்தம் குடிகொண்டது. ஆசிரியர் ஆனந்த ராவ் தன் யஜமானர் சிவசுப்ரமண்யரின், அறையை நோக்கி சென்ருர்.

* * * *

அஸாவேரி ராகம் காற்றுடன் லீனமாய், கம்பீரத்துடன் தன்னறையினுள் வீற்றிருக்கும் சிவசுப்ரமண்யரின் காதில் ஒலித்தது. ராகத்தின் இனிமை சுழற்காற்றில் சுழன்று மேல் நோக்கிச் செல்லும் துரும்புபோல் உச்சஸ்தாயியில் மேல் நோக்கிச் சென்று, மலையருவி கீழ் நோக்கி சல சலவென்று வருவதைப்போல் குரல் புரண்டு வரும் வேகம் ஜனங்களை அடியுடன் மயக்கியது.

அறைக்குள் வீற்று கானம்ருதத்தை கேட்டுக்கொண்டிருந்த சிவசுப்ரமண்யர் தன்னிலை மறந்தார். எங்கோ வேறு உலகில் சஞ்சரிக்கத் தொடங்கினுர். அவர் நினைவு அவரை விட்டகன்றது. அடுத்தது முகாரி ராகக் கீர்த்தனை: உள்ளமுருகப் பாடினுள் பாடகி. அப்பாட்டு அவரை பதினைந்து வருஷத்திற்கு முன் கொண்டுபோய் ஓர் பெரிய மாடியில் பத்து பேருக்கு முன் வீற்றிருக்கச் செய்தது. கண்ணை மூடிக்கொண்டார். நெற்றியில் இடக் கரத்தை அழுத்தி பிடித்துக்கொண்டு அப்படியே நாற்காலியில் சாய்ந்தார்.

சிறு கதை
★
ஸ்ரீமதி கமலா
எழுதியது

அச்சமயம் சிவசுப்ரமண்யர் கச்சேரி நடக்கும் இடத்திற்கு வருவாரோ என்றழைக்க வந்த ஆசிரியர் ஆனந்தராவ் அவர் வீற்றிருக்கும் விந்தையை நோக்கி வியப்பே வடிவாய் நின்ருர். அப்படி சில சமயம் தன்னை மறந்து வீற்றிருப்பதை அநேக முறை பார்த்திருக்கிருர். அச்சமயத்தில் உலகமே புரண்டாலும் அவர் விழிப்புக்கொள்ள மாட்டார். அவர் கண்ணீர் ஆருய் வடிந்து வற்றிய பின் தானுக எழுந்து வெளி வருவார். விருப்பமிருந்தால் உண்பார்; இல்லாவிடில் அதுவும் மண்தான். இது சிவசுப்ரமண்யரின் வாழ்க்கை வழி. அவர் மனதில் சாந்திக்கும் அசாந்திக்கும் சண்டை ஏற்படுங்கால் அவர் இவ்வேதனையில் ஆழ்வதுண்டு என்பது ஆனந்தராவுக்கு நன்ருய்த் தெரியும். அவர் ஒன்றும் பேசாமல் வந்த வழியை நோக்கிச் சென்ருர்.

முகாரி ராக கீர்த்தனை முடிவடைந்தது. விரஹ விலாபமான பைரவி ராக ஆலாபனை தொடங்கிற்று. பைரவியிலிருந்து ஆனந்த பைரவி ஆத்மாவிற்கு ஆத்மா சந்தித்து சக்யம் பெற விரும்பியதுபோல், பாடகியின் கானம்ருதத்தில் மனதை லயிக்கவிட்டு வீற்றிருந்தனர் ஜனங்கள். தீக்ஷிதர் கீர்த்தனை பாடத் தொடங்கினுள். "மானஸ குரு குஹ ரூபம் பஜரே"—சிவசுப்ரமண்யர் அறையில் வீற்றிருக்க சக்தியற்றவராய் எழுந்து, வெளியில் வந்து பாடகியை யார் என்று பார்க்க ஆவல் அதிகரித்து நின்ருர். அவருக்கு அவ்விடத்திற்கு வர வழியில்லை. பாடகியின் பின்புறம் தான் தெரிந்தது. மறுபடியும் தன் அறைக்குள் சென்ருர். கண்ணீர் கடகட வென்று புரண்டு முகத்தில் வழியத் தொடங்கிற்று. தன்னை மறந்து சாய்ந்தார்.

லலிதா ஸ்தோத்திரத்தை 'ராக மாலிகை'யில் பாடத் தொடங்கினுள். தேவியே தன் மயமாய் கேட்பதுபோல் சபையோர்களுக்குத் தோன்றியது. தன்னை மறந்து வீழ்ந்திருந்த சிவசுப்ரமண்யர் அப்படியே வீழ்ந்து கிடந்தார். கச்சேரியும் முடிந்தது. ஜனங்கள் கலைந்து சென்றனர். பாடகியின் காரியதரிசி ஆனந்தராவை அணுகி கலாமந்திரத்தை மறு நாள் காலை தங்கள் எஜமானியுடன் பார்வையிட்டு தாங்கள் தங்கள் இருப்பிடம் செல்வதாகச் சொல்லி சென்ருள்.

* * * *

கலாமந்திர மாணவ மாணவிகள், தங்கள் குருதேவர் அன்றைய கச்சேரி தொடங்கியதிலிருந்து கண்ணில் படாமலிருக்கவே, மிகவும் வருந்தி அவரறைக்கு கூட்டமாய் சென்றனர். சிவ சுப்ரமண்யர் உணர்ச்சியில்லாமல் படுத்திருப்பதைப் பார்த்து அவருக்கு சிச்ருஷை செய்து அவரை எழுப்பினுர்கள். அவர் புன் சிரிப்பு சிரித்துக் கொண்டே கண்விழித்து, அவர்களை அவ்விடம்விட்டகலும்படி உத்திரவிட்டார். பாடகியின் மதுரத்வனி அவர் காதுகளில் இன்னும் ரீங்காரம் செய்துகொண்டிருக்கிறது. அவர் கண் முன் திரைப்படலங்கள் ஒன்றன் பின் ஒன்ருய் வந்துநின்றுகாக்ஷியளிக்கின்றன.

காசி விச்வ வித்யாலயத்தில எம். எஸ். ஸி படித்துக்கொண்டிருக்கும் போது துர்க்க பூஜா விடு முறைகள், தன் ஜன்மஸ்தானத்திற்கு போக மனமில்லாமல் அன்னபூர்ணியின் கொலுவைப் பார்க்க ஆசை கொண்டு அவ்விடமே நின்று விட்டான். அக் கலாசாலையில் ஆங்கில ஆசிரியர் ஆதி நாராயணர் சிவசுப்ரமண்யனின் சுறுசுறுப்பையும் முகப் பொலிவையும் பார்த்து மனமகிழ்ந்து, தம் ஒரே புதல்வியான மஹேச்வரியை அவனுக்கு கொடுக்க நிச்சயித்து அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தார்.

அது தை மாதம். வடக்கே யாத்திரை செய்பவர்களுக்கு அதிக வெயிலும் குளிரும் இல்லாமல் சீதோஷ்ண ஸ்திதி சுமமாய் இருந்தது. கலாசாலையில், மாணவர்கள் வரும் பரிக்ஷைகளுக்காக அதி சிரத்தையாய் படித்துக்கொண்டிருக்கிறார்கள். திடீரென்று ஒரு நாள் சிவசுப்ர்மண்யனின் பெற்றோர்களிடமிருந்து அவர்கள் காசி யாத்திரை செய்ய வருவதாய் கடிதம் வந்தது. அவர்களை அழைத்து வர ரயிலடிக்குச் சென்ருன். தனக்கு முன், ஆசிரியர் ஆதி நாராயணையார் வருகைக்காகவோ அவ்விடம் காத்திருப்பதைப்பார்த்து, அவரிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, அவன் தாய் தந்தையர்கள் வரும் புகைத்துடரும் வரவே, அவர்களை தேடச் சென்ருன். அவர்கள் ரயிலை விட்டு இறங்கியதும் ஆசிரியர் அவர்களை அணுகி தான் யாரென்றறிவித்துக் கொண்டு அவர்களை தன்னில்லம் அழைத்துச் சென்ருர்:

அன்று மாலை தன் நண்பர்கள் சூழ சிவசுப்ரமண்யன் மஹேச்வரியைப் பார்க்க அவர்களில்லம் சென்ருன். தனக்கு முன்பே கலாசாலை ஆசிரியர்கள் அவ்விடம் ஓர் கூட்டமாய் தன் வருகைக்காக காத்திருப்பதை பார்த்து வெட்கி தலை குனிந்து தனக்கென்றிருந்த ஆசனத்தில் அமர்ந்தான். அச்சமயம் ஓர் பதினுன்கு வயது சிறுமி அவர்கள் நடுவில் வந்து வீற்று "மானஸ குருகுஹ ரூபம் பஜரே" என்ற தீக்ஷிதர் கிருதியை வெகு அழகு பெறப் பாடினுள். அக்கீர்த்தனை எவ்வளவு இனிமையாய் இவன்காதில் ஒலித்ததோ அதே இனிமையுடன் இன்றும் ஒலித்தது. அக்கீர்த்தனத்தை அவள் ஒருவள் தான் அவ்வளவு அழகாய்ப்பாடுவாள். வேறுயாரும் பாடமாட்டார்கள். பதினைந்து வருஷத்திற்கு முன், கேட்ட அதேகுரல். அதே உச்சரணை. அதே நெகிழ்வு, அப்பா! இப்பொழுது மஹேச்வரி யாரையாவது மணந்து, பிள்ளை குட்டிகளுடன் மகிழ்வாய் வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பாள்!... தானே வரண்ட ஹிருதயத்துடன் ஜீவித வழியை ஒருவர் துணையுமின்றி நடத்தி, காதலனின் வீட்டிற்கு செல்லவேண்டும். இன்று பாடியவள்... என்று. மண்டையைப் பிளந்து கொண்டார்.

* * * *

விவாஹம் எல்லோர் சம்மதத்துடனும் நிச்சயிக்கப்பட்டது ஒரே பெண்ணுனதால் தனக்குப்பின் சேரப்போகும் தன் ஆஸ்தியில் பாதியை விவாஹத்தின் போதே வரதக்ஷிணையாகக் கொடுத்துவிடுவதாய் சொன்னுர். காசி அதிகதூரமாயிருப்பதால் விவாஹத்திற்கு வரவேண்டிய பந்து மித்திரர்களை உத்தேசித்து ஆதி நாராயணரின் பிறப்பிடமான ஆற்காட்டில் நடத்த நிச்சயித்தனர்.

விவாஹம் சிறப்பாய் நடக்க அதிக செலவு செய்யப்பட்டிருந்தது. ஜான் வாஸ் என்னும் மாப்பிள்ளை அழைப்பு ஆய்விட்டது. பிள்ளைவீட்டார்கள் அவர்களுக்கென்றேற்பட்ட விடுதியில் படுத்து இன்பமாய் பேசிக்கொண்டிருந்தனர். அச்சமயம் எங்கிருந்தோ "அட பாபி; இப்படியா மோசம் செய்கிருன். இவன் பணத்தை உடைப்பில்

போடு. இவ்வன் பெண் அழகை உயிருடன் வைத்துக்கொளுத்து" என்று பற்பல விதமாய் சிவசுப்ரமணியனின் தாய் கூச்ச லிட்டாள், அவ்வம்மையின் கூச்சலைக் கேட்டு ஒவ்வொருவராய் எழுந்து காரணத்தையறிய பிரயத்தினப் பட்டார்கள். கடைசியில் வசை மொழிகளுக்கிடையே அந்தம்மாள் சொன்னது "மஹேச்வரி ஓர் கைம்பெண். அதை மறந்து ஆதிநாராயணர் விவாஹம் செய்கிறார் என் பிள்ளைக்கு கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன். அவர் பணத்தை அவரிடம் கொடுத்துவிட்டு இப்பொழுதே அவ்விடத்தை விட்டு அகல வேண்டும்"

ஓர் கிருஹஸ்தனுக்கு இதை விட அவமானம் வேறு என்ன வேண்டும்? ஆதிநாராயணர் காதில் இவ்விஷயம் பட்டதும் அப்படியே மூர்ச்சையானார். சிவசுப்ரமண்யனின் பெற்றோர்கள் அப்பொழுதே அவ்விடம் விட்டு சென்றார்கள். ஆதிநாராயணர் நினைவு பெற்று "அப்படி யொன்றுமில்லை. தன் சொத்தை கொடுக்கவில்லை என்று தன் மேல் பொறாமை கொண்ட பங்காளிகளும், தன் பெண்ணை மணக்க விரும்பிய மற்றோர் மூர்க்கனும் வேண்டுமென்று கட்டிவிட்ட பெரும் புளுகு இது. வேண்டுமானால் காசியிலிருக்கும் என் நண்பர்களுக்கெழுதி தெரிந்துகொள்ளலாம்" என்று எவ்வளவோ மன்றாடினார். யாரும் அவர் சொல்லை நம்பவில்லை.

சிவசுப்ரமண்யன் அவர் பணத்தை அவர் முன்பு வைத்தான். அவர் அதைத்தொடாமல் "சிவம்! நீ கூட இந்த அபாண்டத்தை நம்புகிறாயா? எனக்குப் பணம் வேண்டாம். என் குழந்தையை அநியாயமாய் பாபக்குழியில் தள்ளிவிட்டார்கள். இப்பணம் தானே அதற்குக் காரணம். இதை கொண்டு போய் குப்பையில் போடு" என்று தன் மகளை கட்டிக்கொண்டு அழுதார்.

மஹேச்வரியின் முக பத்மத்தில் இருகரிய வண்டுகள் ஆழ்ந்துப்பதிந்து எழுந்து ஓட வழி தெரியாமல்திணறுவதைப்போல் அவள் கண்கள் கண்ணீரில் ஆழ்ந்து திகைத்தன. அவ்விருவான் சங்கடத்தையும் பார்த்து மனம் சஹியாமல் கண்ணீர் வடித்தபடியே இளம் உள்ளம் படைத்த இளைஞன், தாய் தந்தையருக்கு அவமானத்தை கொடுக்க அஞ்சியதால் கண்ணை மூடிக்கொண்டு இருளில் மறைந்தான்.

* * * *

இருளில் நிசப்தத்தை பிளந்து கொண்டு இரு ஜீவன்கள் விடும் சங்கடமான உச்வாஸத்வனி இவ்விருண்ட அண்டத்தை பிளக்கப் போதுமானது. அப்படி உயிர்மேல் வெறுப்புடைந்துவிடும் பாரமான மூச்சுகளுக்கு இம்மஹீதலம் பிளந்து போகுமானால் பூ தேவி கணக்கற்ற உயிர்களின் வேதனை த்வனியை எப்படி நித்யமும் இன்பமாய் பருகக்கூடும்? இளம் பனது; பெரும் பூசப்பத்திற்கு பயாது துடிப்பதுபோல் துடித்துக்கொண்டு பிதாவைக் கட்டிக்கொண்டு கண்ணீர் வடிக்கிறது!

பிதாவான நாராயணரோ தன் ஸ்ருஷ்டியான இளம் துளிர் கொடி அபாண்ட சொற்கவென்னும் இடியால் அடியுடன் நசுக்குண்டதைக் கண்டு உள்ளத்தைக் கிழித்துக்கொண்டு வரும் துக்கத்தை காற்று நிறப்பிய பலூனை சிறு குழந்தைகள் அழுத்திப் பிடித்துக்கொள்வதைப்போல், சஹிக்கக்கூடாத பாரமாய் இருக்கும் ஹ்ருதயத்தை ஒரு கையால் அழுத்திப் பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் மகளை அணைத்துக் கொண்டார். காற்று அதிகமாய் விட்ட பலூன் சிறிய மெலலிய கைகளின் பாரத்தை தாங்காமல் வெடித்து, காற்றுடன் காற்று கலந்துக்கொள்வதைப் போல் சிருஷ்டியுடன் ஸ்திதி போய் லயித்துவிட்டது.

பதினைந்தாண்டுகளுக்குப் பின் 'மானஸ குரு குஹ ரூபம் பஜரே' என்னும் ஆனந்த பைரவி கீர்த்தனை பலவித சங்கடத்திற்குப் பின் பூர்வாஸ்ரமத்தை நினைப்பூட்டி தட்டி எழுப்பிற்று. ஆசாபாசங்களை அறவே அகற்றிய சுக பிரம்மத்திற்குப் பின் இக்கலியில் சிவசுப்ரமண்யன் என்று ஜனங்கள் சொல்லிக் கொண்டிருந்தனர். அவர் மனத்தள் புதைந்து கிடக்கும் சிந்தனைச் சுழலை யாரே அறிவர்?

மறு நாள் காலை காந்தாமணி தன் சமூகத்துடன் கலா மந்திரத்தை சுற்றிப் பார்க்க வந்தாள், ஆசிரியர் ஆனந்தராவ் அதற்கு வேண்டிய ஏற்பாட்டினைத்தும் செய்து சென்றார். சிவசுப்ரமண்யன் இரவு முழுதும் சொல்லறியா வேதனையோடு "மானஸ குரு குஹ ரூபம் பஜரே" என்னும் பாட்டையே மறுபடியும் மறுபடியும் நினைந்து கண்ணீர் வடித்தார். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் விட்டுவந்த தாய் தந்தையரையும், கண்ணீர் சோரநிற்கும் தந்தை மகளையும், தேன்பூசிய விஷத்தைப்போல் விளங்கும் விவாஹ வீட்டையும் வாயிலிற் பச்சிலைத் தோரணங்களாலும் வாழை, தென்னை மா, கட்டப்பட்டு தங்கள் பசுமையை இளம் நிலவில் தற்பெருமையுடன் வீசிக்கொண்டு சாந்தமாய் நிற்க அசாந்திக்கே இருப்பிடமாயிருக்கும் கண்கள் கண்ணீரை வடித்து துடிக்க, இச்சங்கடத்தைப்பார்த்துச் சகியாத ஓர் இளம் உள்ளம் துடி துடித்து இருட்டில் ஓடிற்று.

எங்கோ தெற்கில் ஓடத் தொடங்கிய ஜீவன் வடக்கே விஜயநகரத்திற்கருகாமையில் வத்து நிலைபெற்றது: தன் அசாந்தியை போக்கிக்கொள்ள ஓர் ஸேவா மந்திரத்தை நிறுவ பல பேர்களின் சஹாயத்தை பெற்று கலாமந்திரத்தை நிலை பெறச் செய்தான்,

"ஸ்வதேஸச பூஜ்யதே ராஜா;
விதவான் ஸர்வத்ர பூஜ்யதே!"

என்னும் மூதுரைப் பொய்யாகாமல் சிவ சுப்ரமண்யன் தன் கலைத்திறமையால் பிற நாட்டில் கீர்த்தி பெற்றான். சிவசுப்ரமண்யன் ஓர் பிரம்மசாரி, சித்திரக்கலை, ஞானம், சங்கீதம், இம் மூன்றிலும் அபார ஞானம் படைத்தவன். கலாமந்திரத்தில் இம்மூன்று பிரிவும் அவன் மேற்பார்வையில்தான் நடக்கும்,

ஆசிரியர் ஆனந்தராவ், அன்று காந்தாமணி கலா மந்திரத்தை 'பார்க்க வருவதை சிவசுப்ரமண்யனி'டம் சொல்லவில்லை. அவர் சொல்ல சென்றபோது சிவசுப்ரமண்யன் தன் நிலை மறந்து இருந்ததைப் பார்த்து சொல்லாமல் வந்து விட்டார். மறு நாள் அதி காலையில் எழுந்து சிவசுப்ரமண்யன் தன் வேலைகளை முடித்துக் கொண்டு கலா மந்திரத்திற்குள் தேவீ தர்ஸனத்திற்காக வந்தார். இவருக்கு முன்பே காந்தாமணி தன் பரிவாரங்களுடன் மந்திரத்தை சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தாள். சங்கீத சாலைக்குள் நுழைந்தாள். வித்தியார்த்திகள் சங்கீதப் பயிற்சி செய்து கொண்டு வீற்றிருந்தனர். கலைவாணியின் விக்கிரகம் அழகு பெற அவ்விடம் வீற்றிருக்கும் காக்ஷி மாணவ மாணவிகளுடன் தானும் தன் திரு வாய்த் திறந்து பாடுவதை போல் தோன்றிற்று.

சித்திரச் சாலைக்குள் நுழைந்தாள். சித்திரங்கள் அப்பழுக்கில்லாமல் சைத்ரீகனின் நிபுணத்வத்தை விளக்கி காட்டுவதாயிருந்தன, அவ்விடத்தில் மூன்று படங்கள் உயர்ந்தனவாய் இருந்தன. ஒன்று. 'அபவாதம்': மற்றொன்று 'அந்த காரத்திற்குள்': வேறொன்று, விரஹவிலாபம். விரஹவிலாபத்திற்கருகில் நின்று காந்தாமணி கண்ணீர் வடித்தாள்: அவள் அநுசரிகள் அப்படத்தின் உயர்விற்கு வியந்து கற்சிலை போல் நின்றார்கள்.

அச்சமயம் சிவ சுப்ரமண்யன் அவ்விடம் வெகு நிதானமாய் "மானஸ குருகுஹ ரூபம் பஜரே" என்று முணு முணுத்துக் கொண்டு உள் நுழைந்தான். சாந்தமே உருவாய் நிற்கும் காந்தாமணியின் ஹிருதய குஹரத்தினுள் "மானஸ குருகுஹ ரூபம்" என்னும் சொற்கள் ஓர் சலனத்தை ஏற்படுத்தவே" அவள் திரும்பி நோக்கினாள்.

பிரகாசம் குறைந்து சோர்வுடன் இருக்கும் முகத்தை ஏறெடுத்துபார்த்தாள் சிவசுப்ரமண்யன் ஸ்தம்பீபூதனானான். 'யார் அது? மஹேச்வரியா?" என்று உணர்ச்சியற்று நின்றான். காந்தாமணி கண்ணீர் வழிய நின்றாள்.

"மஹேச்வரியா! இவர் சங்கீத விதுஷி காந்தாமணி" என்று அவளருகில் நின்றவர்கள் சொன்னார்கள். சிவசுப்ரமண்யன் நாதழுதழுக்க "ஆம் நீ காந்தாமணி தான் மஹேஸ்வரி உன்னை முதலில் சந்தித்தது...... பிறகு அந்தோ! பதினைந்தாண்டுகளுக்குப் பின் இன்று 'கா...ந்தா ...மணி" என்று ஒவ்வொரு எழுத்தாய் உச்சரித்தான்.

காந்தாமணி. "நாதா அன்று நான் கைம்பெண்ணல்ல என்பது உண்மை. இன்று நான் உண்மையில் கை...ம். பெ...ண்" என்று அவன் காலடியில் வீழ்ந்தாள்.

காலுக்கருகில் வீழ்ந்த காந்தாமணியை கையிலெடுத்து தன்னறைக்கு சென்றான் சிவசுப்ரமண்யன்.

நரஸுஸ் டீ குடியுங்கள்

நறுமணத்திற்கும் பானத்திற்கும் நிகரற்றது

சில டீ இலைகள் சிறந்த மணமுள்ளதாயினும் ருசிப்பதில்லை. மற்றும் சில வாய்க்கு ருசிப்பினும் மணமிருப்பதில்லை. நரஸுவால் பொறுக்கி பதம் செய்யப்படும் டீ சிறந்த மணத்துடன்கூடிய உங்களுக்குகந்த ஓர் உயர்ந்த பானமளிக்கும்.

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.
கீழ்க்கண்ட இடங்களில் கிளை ஆபீசுகள் சீக்கிரம் ஆரம்பிக்கப்படும்:—
பம்பாய், டெல்லி, ரங்கூன், கொளும்பு.

நரஸுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
பாக்டரிகள்:-
சென்னை, சேலம். MNTK-12

FREE! (1) How to Enjoy Married Life.
(2) How to Make Various Kinds of Scented Hair Oils and Perfumes at Home at a very Cheap Cost.
Please apply at once to:—
S. PAUL & Co., Dept. S. M.
4, Hospital St., Dharamtola CALCUTTA.

மதனமஞ்சரி மாத்திரைகள்
மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், தாது கேடுகள் முதலியவற்றை நீக்கி, இரத்த புஷ்டியும், தாதுவிருத்தியு முண்டாகும். விலை ரூ. 1/-.
மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனாபஜார் ரோடு, மதராஸ்.
புரசவாக்கம் : எஸ். டி. பல்டானே.
ஊரிகம் : டி. ஜான்ஸன் & பிரதர்ஸ்.

★ நடன சிங்காரி ★

சித்திரம் வரைவது ஒன்றுதான் அவன் வேலை. அவன் புகழ் இன்னும் ராஜ சபையை எட்டவில்லை. உற்சவ காலங்களிலும் பண்டிகை நாட்களிலும், அவன் சில தேவதைகளின் படங்களை எழுதி விற்று ஜீவனம் செய்து வந்தான்.

அன்று அவன் தன் சித்திர சாலையில் ஒரு படம் எழுத உட்கார்ந்தான். படம் எழுதி முடிவதற்கு இருந்தது. எழுதிக் கொண்டே இருக்கையில் அவன் மனத்தில் ஒரு விசித்திரக் கற்பனை உதித்தது. இனி அன்று அந்தப் படம் பூர்த்தியாகும் என்ற நம்பிக்கை இல்லை. அவன் சட்டென்று எழுந்து, ஜன்னலருகே சென்று, சூனியப் பார்வையோடு ராஜ வீதியைப் பார்த்தான். பாதையில் உலாவிய எண்ணற்ற பேர்களில் ஒருவராவது அவன் மனத்துக்குத் திருப்தியைத் தர முடியவில்லை; அவனுடைய சந்தேகங்களுக்கு விடை தர முடியவில்லை, மீண்டும் அவன் சித்திரத்தின் சிந்தனைகளில் ஆழ்ந்தான். சலாகையில் வர்ணத்தை எடுத்தான். ஆனல், வர்ணம் அதன் மீதே உலர்ந்து போயிற்று.

அடுத்த நிமிஷம் யாரோ வரும் காலடிச் சப்தம் கேட்டது. அவன், மனம் பதைக்க, "அப்பால் போய் விடு! இப்போது என்னைத் துன்புறுத்தாதே" என்றான். வந்தவள் பதினறு வயதுள்ள மங்கை. அவள் அவன் முன்பு வந்து, "ஏன்? என்னை விட இந்த உயிரில்லாச் சித்திரங்களுடன் இருப்பதே நல்லதென்றுதோன்றுகிறதோ?" என்று சொல்லி நகைத்தாள். ஆனல், அதனல் ஓவியனிடத்தில் ஒரு மாறுதலும் காணவில்லை. அவன், யந்திரத்தைப் போல, அவள் கையைப் பிடித்துத் தன் புறமாக இழுத்துக் கொண்டான். இவ்வளவிலேயே அம்மங்கைக்குத் திருப்தி உண்டாகி விட்டது. பின்பு அவள் வேடிக்கையாக அவன் கையிலிருந்த சித்திர சலாகையைப் பிடுங்கித் தூர எறிந்து விட்டு, அந்தக் கையைத் தன் தலைமேல் வைத்துக்கொண்டாள் மனம் சிறிது அமைதி அடைந்ததும், அவள் சிரித்துக்கொண்டே, "இனி எனக்கு ராஜ சபைக்குப் போக நல்ல சந்தர்ப்பம் வாய்த்துவிட்டது. நாளைக்கு யுவராஜாவின் பிறந்த நாள் கொண்டாட்டம். மகாராஜாவின் நண்பர்களின் வற்புறுத்தலினல், நாளை மாலை அவர்கள் முன்பு என் நாட்டியக் கலையை அரங்கேற்ற வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது" என்று தான் வந்த காரணத்தைக் கூறினாள்;

இந்தச் செய்தியைக் கேட்டு ஓவியனுக்குச் சிறிது அமைதி கிடைத்தது; ஆனல் அவன் மனத்தில் ஓர் ஐயம் எழுந்தது. அவன் அவளைச் சந்தேகப் பார்வையுடன் பார்த்தபோது தான் அந்தச் செய்தியை அவனிடம் சொல்லியிருக்கக் கூடாது என்று அவள் நினைத்தாள். அவள் தலை குனிந்து பேசாமல் உட்கார்ந்தாள்.

* * * *

அவன் பரம ஏழை. அவளும் பணக்காரியல்ல. ஆனல் அவர்கள் இருவரும் கலைப் பிரியர்களாதலால், அவர்களுக்குள் பரிசயம் ஏற்பட்டது. நாட்கள் செல்லச் செல்ல, இந்தப் பரிசயம் நெருங்கிக்கொண்டே வந்தது. ஆனல் தம் எதிர்காலத்தைப்பற்றி இருவரும் தீர்மானிக்காமலே இருந்தனர். அவர்கள் ஒருவரை யொருவர் தைரியப் படுத்திக்கொண்டு நாட்களைக் கடத்தி வந்தனர்.

* * * *

மறு நாள் காரியத் திட்டப்படி அவளுடைய நாட்டியம் நிகழ்ந்தது. பார்த்து யாவரும் மோகித்தனர். அரசன் அவளுக்கு நிரம்பப் பரிசுகள் தந்து சம்மானம் செய்தான். மறு நாளும் அவள் முன்போலவே சித்திரசாலைக்குச் சென்றாள். ஆனல் அவள் அவனிடம் மறதியாகக்கூட ராஜ சபையைப் பற்றி ஒன்றுமே பேசவில்லை; அவனும் கேட்கவில்லை.

> கன்னடக் கதை
>
> ★
>
> "ஜோஷி" எழுதியது
>
> ★
>
> "கமலம்" மொழிபெயர்த்தது

அவள் எப்போதும்போல் சித்திரசாலைக்கு வருவாள்; ஆனல் இப்போதெல்லாம் அவள் முகம் வாட்டமுற்றிருந்தது. பேச்சில் முன்போன்ற அந்த நேர்மையும் அந்த உல்லாஸமும் இல்லை.

சில நாளைக்கெல்லாம், அவள் யுவராஜாவின் கேளிக்கை தாஸியாக்கப்பட்டு, அவருடைய அந்தப் புறத்தில் போய்ச் சேர்ந்துவிட்டாள் என்ற செய்தி எட்டியது. சாலையில் விழுந்திருந்த ரத்தினம் தணிகனின் பொக்கிஷத்தில் சேர்க்கப்பட்டது.

* * * *

ஓவியனின் வருங் காலம் இன்னமும் தீர்மானிக்கப்படாமலே இருந்தது, ஒரு நாள் ராஜ சபையிலிருந்து அவனுக்கு அழைப்புக்கடிதம் வந்தது. அரண்மனையில் இரண்டோர் இடத்தில் சித்திர வேலை செய்ய வேண்டியிருந்தது. ஏற்கனவே அரசனின் கிருபைக்குப் பாத்திரர்களான பல பேர்கள் மகத்துவம் வாய்ந்த அந்தக் காரியத்தின் பொறுப்பை ஏற்பதற்குத் தகுதியற்றவர்கள் என்று தீர்மானமாயிற்று! ஆகவே அந்த வேலை அவனிடமே ஒப்புவிக்கப் பட்டது. கீர்த்தி தேவதையின் எண்ணம் அதுதான்!

* * * *

பத்து வருஷங்களில்—இவ்வளவு நீண்ட காலத்தில்—எத்தனையோ மாறுதல்கள் உண்டாயின. முன்பு இருந்த அந்தச் சித்திரசாலை இன்று இல்லை; அதன் ஸ்தானத்தில் ஓர் அழகிய சித்திர மாளிகை வனப்புற நிற்கிறது.

ஒரு நாள் மாலையில் அரண்மனையிலிருந்து வந்த ஒரு பல்லக்கு சித்திர மாளிகையின் முன்னே நின்றது. அதிலிருந்து அழகிய இள நங்கை யொருத்தி இறங்கி வந்தாள். ஓவியன் அப்போது வீட்டில் இல்லை. ஆகவே வேலைக்காரர்கள் மிகவும் மரியாதையோடும் பணிவோடும் அவளை வரவேற்று உள்ளே அழைத்துப் போனார்கள். உள்ளே சென்றதும் அவள் தன் மேற்போர்வையை வேலைக்காரியிடம் கொடுத்துவிட்டு சித்திர சாலையை நோக்கி நடந்தாள்.

அதன் வைபவத்தைக் கண்டு அவளுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. அங்கிருந்த சித்திரத் தொகுதிகளைக் கண்டு அவளுடைய ரஸிகத் தன்மை விழித்தெழுந்தது. பல ஓவியங்கள் இன்னும் அரைகுறைபாக இருந்தன. ஆனல் அவைகளிலும் அவனுடைய கலைத் திறமை பிரகாசித்தது. மூலையில் கறுப்புச் சீலையால் மூடிய சித்திரமொன்று வைத்திருந்தது. ஆவலோடு அவள் அந்தச் சித்திரத்தினிடம் சென்று சீலையை அகற்றினாள். ஆம், அது அவளுடைய பாவ சித்திரந்தான், அவள் இந்தச் சித்திரத்தைப் பத்து வருஷங்களுக்கு முன்பு அரை குறையான நிலையில் பார்த்திருந்தாள், இன்று அந்தப் படம் பூர்ணமாயிருந்தது. பத்து வருஷங்களுக்குப் பின்பும் அதில் எந்த மாறுதலும் உண்டானதாகத் தோற்றவில்லை, அப்படி ஏதாவது இருக்கிறதென்றால் அவள் உடல் ஒரு வேளை சற்றுப்பருத்திருக்கலாம். அவள் நடையில் சிறிது சோம்பல் வந்திருக்கலாம்-அவள் பார்வை கேளிக்கை மயமாகியிருக்கலாம்; இது தவிர வேறு ஒன்றுமில்லை.

அந்த ஓவியத்தில் ஒரு நடன சிங்காரியின் நாட்டிய அழகு இருந்தது. அதே அழகு! அதே கட்டுக்கோப்பு இளமையின் அதே ஒயில். அவள் உணர்ச்சி வசப்பட்டு மிகுந்த ஆச்சரியத்தோடு அந்தப் படத்தைப் பார்க்கலானாள், அதைப் பார்க்கப் பார்க்க அவள் இதயம் படபடத்தது. சித்திரத்திலிருந்த நடன சிங்காரியின் கண்களில், திருப்தி பெறாத காமவிகாரத்தின் தாண்டவ நர்த்தனமே சித்திரிக்கப்பட்டிருந்தது! அந்தப் பயங்கரக் காட்சியைக் கண்டு. அவள் சித்திர சாலையை விட்டு வெளியே வந்தாள்; வேலைக்காரியிடமிருந்து தன் போர்வையை வாங்கிக் கொள்ளாமலே பல்லக்கில் போய் உட்கார்ந்தாள், பல்லக்கு அரண்மனையை நோக்கிச் சென்றது.

அதற்குப் பின்பு அவள் அரண்மனையை விட்டு வெளி வரவேயில்லை.

காதல் கவி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நினைத்து எழுதிக் கொண்டிருக்கிறேனே அவள் ஒரு தேவி! என் வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே என்னை விட்டுப் பிரிந்து விட்டாள். என்னை விட்டுப் பிரியும் சமயம்..." என்று அவன் சொல்லும்போதே குரல் தடைபட்டது. கண்கள் நீரைச் சொரிந்தன.

"ஹூம்! நான் தெரிந்து கொண்டேன். தங்கள், தங்கள் அன்புள்ள மனைவி—மறைந்து போனவளை—யைப் பற்றியே காவியங்கள் இயற்றுகிறீர்கள். உண்மையில் தங்கள் ப்ரேமை தெய்வீகமானது. நிரந்தரமானது—யுக யுகாந்திரத்திலும் அழிவில்லாதது..."

அந்த சந்திப்பிற்குப் பிறகு சந்திரகிரணுக்கு அவன் மேல் ப்ரேமை யுண்டாகியது.

நான்கு மாதங்களுக்குப் பிறகு நகரத்தின் பிரபல பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் "பிரபல கவி கமல்குமாருக்கும், சந்திரகிரணுக்கும் காதல்மணம் கடைந்தேறியது" என்று எழுதி இருந்தது. ஜனங்கள் அதைப் படித்து ஆனந்தப் பரவசமானார்கள் கமல்குமாருடைய காவியங்களில் அன்றிலிருந்து நிராசையின் சாயைகூடக் காணவில்லை.

நவயுகப் பிரசுரங்கள்

தமிழ்க் குமரி	1	12
திருச்சி ஜெயில்	1	12
பெண்	1	12
கிரஹதாகம் (பாகம் 1)	1	12
ஷை (பாகம் 2)	1	12
மின்சாரத்தின் விந்தை	1	12
மகாராஷ்டிரஜீவன் உதயம்	1	12
தற்காலத்தமிழ் இலக்கியம்	1	8
இந்தியாவும் பொதுநல சமுதாயமும்	1	8
கட்ட பொம்மு	1	8
வின்ஸ்டன் சர்ச்சில்	1	8
பேஸிஸ்ட் ஜடாமுனி	1	8
ஆரம்ப அரசியல் நூல்	1	8
நடைச் சித்திரம்	1	8
மழையும் புயலும்	1	8
உலகம் பலவிதம்	1	4
ஸ்டாலின்	1	4
பாதுகா பட்டாபிஷேகம்	1	4
ஆங்கிலக் கவிதை மலர்கள்	1	0
ஷை பரிசுப் பதிப்பு	1	8
அருள் மொழிகள்	1	0
தமிழ் அறிஞர் முதலியார்	1	0
அற்புத உலகம்	1	0
உலகத்துச் சிறுகதைகள்	1	0
தேவதாஸ்	1	0

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

நௌகா சரித்திரம் **16-வது கீர்த்தனை**

I

பல்லவி

இந்துகேமி ஸேதுமம்ம க்ருஷ்ணு
டெந்தோ மாடலாடெ னம்மா

சரணம்

1. மகுவலண்டே யிந்த வாதா
   மாகு மானமே ப்ராணமு காதா
2. குஸ குஸ லந்தேமி வச்சு செலு வாரு
   உஸுருண்டே ஊருபோ வச்சு
3. வனிதலகெ வரிகைன க்ருஷ்ணு
   வஞ்சனகா பல்க தகுனு
4. ஹடமுஸேய வேளகாது ஆத்ம
   ஹத்யகானி வேரெ லேது
5. நக்னமுகா நில்வ வசமா க்ருஷ்ணு
   நலுகுரிலோ நீகு யசமா
6. நாமாடலு வினி மீரு வேக
   நனு கட்டுஜேர்ச போனீரு
7. லலனல பாபமு லேமோ யீ
   லாகு வ்ராத யுண்டெ னேமோ
8. வெலகு தீஸின வலபு ராது
   வெலதுல யிக நம் மராது
9. ராஜன்ய யீடு லெஞ்ச வலது த்யாக
   ராஜ வினுத ப்ரேம கலது

II

இந்துகு ஏமி ஸேதுமம்ம—நாம் இதற்கு என்ன செய்வோம் [அம்மா!

க்ருஷ்ணுடு எந்தோ மாடலாடெனம்மா—கண்ணன் எவ்வளவோ நன்மை பயக்கும் வார்த்தைகளைப் புகன்றுன் அம்மா!

மகுவலு அண்டே—பெண்கள் என்றல்

யிந்த வாதா—இத்தனைக் கேலிக் கூற்று செய்ய வேண்டும்?

மாகு மானமே ப்ராணமு காதா—கண்ணு! எங்களுக்கு மானமே உயிரினும் மேலானது அல்லவா?

செலு வாரு—சகோதரிகளே!

குஸகுஸ லந்து ஏமி வச்சு—நீங்கள் ஒருவருக்கொருவர் ரஹஸியமாகப் பேசிக்கொள்வதால் யாது பயன்

உஸுருண்டே ஊரு போவச்சு—நம் ஜீவன் தப்பினுல் பத்திரமாக ஊர் போய்ச் சேரலாம் அதற்கு வழி தேடுங்கள்

க்ருஷ்ணு!—ஏ கண்ணு!

எவரிகைன—யாருக்காவது

வனிதல—ஸ்திரீகளான எங்களிடம்

வஞ்சனகாபல்கதகுனு—வஞ்சகமாகப் பேசத்தேன்றுமா? அது [தகுமா?

செலுல!—சகோதரிகளே!

ஹடமுஸேய வேளகாது—பிடிவாதம் செய்ய இது உங்களுக்குத் தகுந்த தருணமில்லை.

ஆத்ம ஹத்யகானி வேரேலேது—அப்படிச் செய்வதால் தற்கொலை செய்துகொள்வதாகுமே தவிர வேறென்றுமில்லை.

க்ருஷ்ணு!—ஏ கண்ணு!

நலுகுரிலோ—நாலு பேர் மத்தியில்

நக்னமுகா நில்வ வசமா—ஆடையின்றி இருப்பதற்குக்கூடுமா?

நீகு யசமா—இப்படி எங்களைச் செய்வதல் உனக்கு கீர்த்தியா?

செலுலார!—சகோதரிகளே!

நாமாடலுவினி—என்வார்த்தையைக்கேட்டு அவ்விதம் செய்து

மீருவேக நனு கட்டு ஜேர்ச போனீரு—நீங்கள் சீக்கிரமாக [என்னை கரை சேர்ப்பிக்கமாட்டீர்கள் போலிருக்கிறது.

க்ருஷ்ணு!—கண்ணு!

லலனல பாபமுலு ஏமோ—பெண்களாகிய நாங்கள் செய்த [பாபங்களின் பயன் எவ்விதமோ தெரியவில்லை.

யீலாகு வ்ராதலுண்டேனேமோ—இவ்விதமாய் அனுபவிக்க [எங்கள் தலை எழுத்து இருந்ததோ என்னமோ

செலுலார!—சகோதரிகளே!

வெலகு தீஸின வலபு ராது—விலைக்கு வாங்கினல் மோகம் [உண்டாகாது.

வெலது லயிக நம்மராது—பெண்களை இனி ஒருபோதும் [நம்பக்கூடாது என்று தெரிந்துகொண்டேன்.

த்யாகராஜ வினுத!—த்யாகராஜனுல் துதிக்கப்பட்ட ஏ [க்ருஷ்ணு!

ராஜன்ய!—அரசிளங்குமாரனே!

யீடுலெஞ்ச வலது—நீ எங்களை இவ்விதம் செய்யக்கூடாது

ப்ரேம கலது—உன்னிடம் உண்மையான அன்பு எங்களுக்கு [உண்டு

III

முன் கதைச் சுருக்கம்:—

கண்ணன் வேணுகானத்தைக் கேட்டுப் பரவசமடைந்த கோபியர்கள் அவனுடன் யமுனு தீரம் சென்று ஓர் ஓடத்தில் ஏறி உல்லாஸமாகப் பொழுது போக்கினர். தாங்கள் அடைந்த இன்பத்தினுல் தங்களுக்கு சமானம் ஒருவருமில்லை என்று கர்வமடைந்து தங்கள் நிலைமை மறந்து கண்ணனையும் பரிகாசம் செய்யலானுர்கள்; இவர்கள் கர்வத்தை அடக்க பகவான் இந்திராதி தேவர்கள் உதவியால் காற்று, மழையை வருவித்து ஓடத்திலும் ஓர் துவாரம் உண்டாகும்படியும் செய்தார். இதைக் கண்ட கோபியர்கள் மனம் வருந்தி தங்கள் செயலுக்காக தங்களை நொந்து கொண்டு சர்வசக்தனுன கண்ணனைச் சரணடைந்து அவ்வாபத்தினின்றும் எல்லோரையும் தப்புவிக்க ஏதாவது உபாயம் சொல்லுமாறு பிரார்த்தித்து வேண்டிக்கொண்டனர். அதற்கு கண்ணன் சொன்ன வண்ணம் அந்த த்வாரத்தை அடைக்க அவர்கள் ரவிக்கைகளையெல்லாம் எடுத்து ஓடத்தின் த்வாரத்தை அடைக்க, அவைகள் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போய் விட்டன. அதைக் கண்ட கோபிகைகள் வருத்தம் கொண்டு தங்களுக்குக் கதி என்ன வென்று கண்ணனை வேண்டிக் கொண்டு பிரலாபித்தனர்.

உடனே கண்ணன்

சோகிம்ப வேளகாதிதி—

ராகா சசிவதனலார ராஜிதமயம் பௌ

நௌகா ரந்த்ர முலோபல—

கோகலு வதலிஞ்சி மீரு கொப்புனனிடரே

பூர்ணமான சந்திரனை யொத்த முகத்தை உடையவர்களே! கவலையுறுவதற்கு இது தருணமல்ல. வெள்ளி மயமான இந்த ஓடத்தின் துவாரத்தில் உங்கள் ஆடைகளை எடுத்து அடையுங்கள் என்று சொன்னதைக் கேட்ட கோபியர்கள் வெட்கங் கொண்டவர்களாய் தங்கள் ஜன்மத்தை நொந்து கொண்டனர்.

இந்து கேமி:—இது நௌகா சரித்திரம் 16-வது கீர்த்தனை. கண்ணன் சொல்வது போல் செய்ய வெட்கங் கொண்டவர்களாய் கோபியர்கள் அவனுடன் வாதாட, கண்ணன் அவர்களுக்குத் தேறுதல் கூறுகிறுர்.

குறிப்பு:—கீர்த்தனத்தின் சரணங்களில் முதல் சரணம் கோபியர்களும் அடுத்த சரணத்தில் கண்ணன் அவர்களுக்கு பதில் சொல்வதும் கவனிக்கத் தக்கது.

IV

ராகம் முகாரி — சாபு தாளம்

(22-வது மேள ஜன்யம் ஆ. ஸ ரி ம ப த ஸ அவ. ஸம்பூர்ணம்.)

பல்லவி

; பா ;	பா ; பா மா	மா மா கா	காரீ ரிக ஸா
இந்	து கே .	மி . .	ஸே . து .
கா ரீ ;	மா ; ; ;	; ; ;	ரீ மா பா நீ
மம் . .	ம .		க்ருஷ் ணு .
தா தாரீ	ஸ்ா ; ஸ்ா ;	ஸ்ா ; நீ	நீதா தா பா
. டெங்	த மா	ட .	லா . டெ
மா பா தா	பா ; ; ;	; ; ;	ரீமா பா ;
னம் . .	ம		. . .

(சரணங்களைப் பல்லவி போன்றே பாடவும்)

புஸ்தகங்களில் வராளி ராகம் என்று காணப்படுகிறது. முகாரி ராகத்தில் நான் கற்றுக் கொண்டுள்ள மேலே காணப்படும் வர்ண மெட்டையே வெளியிட்டுள்ளேன்.

செந்தமிழ்ச் செல்வர்

பழுத்த தமிழ்க்கனி! பண்டித வைத்தமாநிதி முடும்பை கோபால கிருஷ்ணமாசாரியாரைப்பற்றி இவ்விதம் குறிப்பிடுதல் முற்றும் பொருந்தும். சென்ற மாதம் ஷஷ்டியப்த பூர்த்தியைக் கொண்டாடிய இந்த தமிழ்ச்செல்வர், தமிழுக்காற்றியுள்ள தொண்டு தனிச் சிறப்பு பொருந்தியது. தமிழை வளர்த்த குடும்பத்தில் பிறந்தவர், தமிழை மேலும் வளர்த்து வருவதில் ஆச்சரியம் ஏது? இவரது பெரிய தகப்பனுர் ஸ்ரீநிவாஸ அப்பனையங்கார் திராவிட பாஷையில் மஹாவித்துவான்: அவருக்கு வடமொழியிலும் விசேஷ ஞானம் இருந்தது. அநேக அறிஞர்களிடம் கிரமமாகப் பாடம் படித்தவர். ஆனுல் இவரது தகப்பனுர் பார்த்தஸாரதி ஐயங்கார், லௌகிக ப்ரவ்ருத்தியில் ஈடுபட்டார். ஸர்வகலாசாலைப்பட்டம் பெற்று, ஸர்க்கார் பதவியேற்று மிகச்சிறு வயதிலேயே காலமாகிவிட்டார். அவரது இளைய குமாரர்தான் நம் புகழுக்குப் பாத்திரராகும் பண்டிதமணி!

* * * * * *

இந்தக் குடும்பத்தார் நீண்டகாலமாகவே ஆழ்வார்களால் பாடப்பெற்ற திருவல்லிக்கேணி க்ஷேத்திரத்தில் வந்து குடியேறியவர்கள்: ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமியின் ஸேவார்த்திகள். கோபாலக்ருஷ்ணமாசாரியார் இளமை வயதில் மிகவும் பலஹீனமாயிருப்பாராம்: ஆரும் பிராயத்தில். ஒரு நாள் இவருக்குக் கடுமையான தேக அசௌகரியம் ஏற்பட, பிராணுபத்து நேரிடுமோ என்ற பயம் எல்லோருக்கும் ஏற்பட்டு விட்டதாம்: இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீநிவாஸ அப்பனையங்காருக்கு, பார்த்தஸாரதிஸ்வாமி கனவில் தோன்றி, சிறுவனுக்கு நம் சாஸ்திரீய முறைப் பிரகாரம் வித்யாப்யாஸம் அளிப்பதானுல், எல்லா ஹானியும் நிவர்த்தியாகும் என்று கூறி மறைந்தாராம். இந்த ஆக்ஞைப் பிரகாரம் இவருக்கு ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் ஆரம்பத்திலிருந்தே உயர்தர பயிற்சி அளிக்கப்படலாயிற்று. பாட்டனுர் நரஸிம்மாச்சாரியரும், பிறகு பெரிய தகப்பனுரும் இவருக்கு முறையே ஆச்சார்யர்களாக இருந்தனர். இதற்கப்புறம் இவர் மற்றும் பலரிடம் போய்ப் படித்துத் தமது வித்யாதனத்தைப் பெருக்கிக் கொண்டார்: காவிய நாடகாலங்காராதிகளிலும், மற்றும் வியாகாரண வேதாந்த பாகங்களிலும் இவர் சீக்கிரமேயே நிபுணர் ஆனுர்.

* * * * *

ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார்.

இவருடைய வாழ்க்கையில், இவரது பெரிய தகப்பனுரின் குமாரரான பண்டித வை. மு. சடகோபராமாநுஜாசாரியருக்கு முக்கிய ஸ்தானம் உண்டு: அவரும் சிறந்த கல்விமான்: தமிழில் கரைகடந்த ஞானம் கொண்டவர்: எந்த விஷயத்தைப் பற்றியும் சாதுர்யமாகப் பேசி, கேட்போரை ரஸிக்கச் செய்யவல்லவர்; தமக்குக் கிடைத்த குலதனமான வித்தையை மற்றவர்களுடன் பங்கிட்டுக்கொள்வதில் கருத்து கொண்டவர்; சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் டாக்டர் சாமிநாதையருக்கு முன்பும், கும்பகோணம் காலேஜில் அவருக்குப் பின்பும் தமிழ் பண்டிதர் ஸ்தானத்தைப் பெருமையுடன் அலங்கரித்தவர்; ஆனுல் அவர் அல்பாயுஸில் காலமானது தமிழுலகுக்கு அபரிமிதமான நஷ்டம்தான் என்று கூற வேண்டும். ஊக்கமும், உற்சாகமும், ஆவமும், அபிலாஷையும் ததும்பிய அவ்வறிஞருடன் சேர்ந்து உழைக்கும் பாக்கியம் இவருக்குக் கிடைத்தது: அவர் ஆரம்பித்த பல கடமைகளில் கலந்து கொள்ளும் பேறும் இவருக்கு வாய்த்தது: இது காரணமாக இவர் தமிழ்த்தொண்டில் சிறப்புடன் ஈடுபட்டார்.

* * * *

சென்ற நூற்ருண்டின் அந்திய வருஷங்களில் சடகோபராமாநுஜாசாரியார் பெரிய வகுப்புத் தமிழ்ப் பாட புத்தகங்களுக்கு, விளக்கவுரைகளும் குறிப்புரைகளும் எழுதி மாணவர்களுக்கு உபகாரமாயிருந்தார். அவர் எழுதியவை, மேலும் பல புதிய விஷயங்களை மாணுக்கர்களுக்குப் புலப்படுத்தி வந்தமையால் அவர்கள் தமிழிடம் அதிகப் பற்றுதல் கொள்ளலாயினர். இதைக் கண்ட அவர் கம்பராமாயணம், வில்லிபாரதம், திருக்குறள், ஆகிய நூல்களின் சில பகுதிகளுக்கு விளக்கவுரைகளும் குறிப்புரைகளும் எழுத முன் வந்தார். சுமார் 20 வருஷ காலம் இதற்காக அவர் பிரயாசைப்பட்டார். ஸ்ரீ சேட்லூர் கிருஷ்ணமாசாரியரும் 1904-ம் வருஷம் முதற்கொண்டு கோபால கிருஷ்ணமாசாரியரும் அவருக்கு இவ்விஷயத்தில் ஒத்தாசையாயிருந்தனர். 1910-ல் சடகோபராமானுஜாசாரியார் காலமான பின்பு, இவர்மீதே பூராப் பொறுப்பும் விழுந்தது. இந்த மஹத்தான காரியத்தை இவர் முழுமனதுடன் நிறைவேற்றி வைத்தார். பெரிய சகோதரர் காட்டிச் சென்ற கடமையைக் கண்ணுங் கருத்துமாய்ப் பின் பற்றினுர். தமிழ்நாடு அதிக லாபம் அடைந்தது: தமிழ் இலக்கியச் செல்வங்கள் ஒரு சிலரது தனிச் சொத்தாக இராமல், எல்லோருக்கும் உரிமையாகி விட்டன: பண்டிதர்களின் பிரத்தியேக போகத்திலிருந்தவை பாமரருக்கும் பொதுவாகி விட்டன. கம்பனின் கவிதையழகையும், வில்லிப் புத்தூரரின் வாக்கினிமையையும், வள்ளுவர் வகுத்த வாழ்க்கை வழியின் உயர்வையும், முதலாயிரத்தில் கண்ட முதற்பொருளின் மேன்மையையும், ஸாமான்யரும் உணர்ந்து அனுபவிக்க உதவிய இவரைத் தமிழுலகம் மறக்க முடியுமா?

* * * *

தமது இருபதாம் பிராயந் தொடங்கி பத்து வருஷ காலம் இவர் நகரில் முறையே இரு வித்யாஸ்தாபனங்களில் போதகராயிருந்தார்: பிறகு 1915-ல் தமிழ்ப் பேரகராதியைத் தொகுக்கும் வேலை ஆரம்பமானபோது, இவரும் ஒரு ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவருக்குத் தென்மொழியிலும், வடமொழியிலும் இருந்த விசேஷ பாண்டித்தியம் இந்த அகராதி நிர்மாணத்திற்கு மிக்கவும் அனுகூலம் புரிந்தது. இருபதாண்டுகள் இவ்விதம் தாய்மொழிக்குத் தொண்டாற்றிவிட்டு, 1935-ல் இவர் பேரகராதி முற்றுப் பெற்றதும், பதவியிலிருந்து விலகிக் கொண்டார். கூட உழைத்தவர்கள் இன்னும் இவரது சேவையைச் சிலாகித்துப் பேசுகின்றனர். அன்று ஷஷ்டி பூர்த்திக் கொண்டாட்டத்தில் அக்கிராஸனம் வகித்த கனம் ஸ்ரீமான் ஜஸ்டிஸ் கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரும் இந்த பண்டித திலகம் இதுகாறும் தொடர்ந்து நடத்தி வந்த கைங்கரியம் மிகவும் உத்தமமானது என்பதைக் குறிப்பிட்டார்.

* * * * * * *

இவரது கைங்கரியம் எல்லோருடைய போற்றுதலுக்கும் உரிமை பெற்றது. மத விஷயங்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்கும்போதும், இவர் குறுகிய நோக்கத்தைக் காட்டியதில்லை; வேதாந்த விசாரங்களை சர்ச்சை செய்தபோதெல்லாம், விதண்டாவிதம் பண்ணியது கிடையாது. வைஷ்ணவக் குடும்பத்தில் உதித்தும், சைவாகமங்களில் இவருக்கு இருந்த சிரத்தை விசேஷமானது. எதையும் கண்டனத்திற்காகக் கண்டிக்கும் ஸ்வபாவம் கிடையாதாயினும், விசிஷ்டாத்வைதமே உய்யும் வழி என்ற மனநிலை நிரம்பியவர். இத்தகைய சிரேஷ்டர்களைப் பாராட்டுவது நம் கடமை. நம் நாட்டில் ஷஷ்டி பூர்த்திகள் அபூர்வம்! அதிலும் தமிழறிஞர்களைப் பஹுமானிப்பது மேலும் அபூர்வம்! இந்த வித்யாநிதி இன்னும் பல்லாண்டுகள் நம்மிடை இருந்து, தாம் ஆரம்பித்த காரியத்தைத் தடையின்றி நிறைவேற்றி வைக்குமாறு மனமாரப் பிரார்த்திக்கிறோம்.

* * * *

"கே. எஸ். ஆர்."

சிறுவர் கதை

★

மந்திரியின் மதி

★

மருதப்பா

நரியின் பெயரைக் கேட்டாலே புலிக்கு ரொம்ப கோபம். சில சமயங்களில் நரி எதிர்ப்பட்டு விட்டால் கொன்று விடலாமா என்றுகூட நினைக்கும் புலி. இருந்தாலும் நரியை என்ன செய்ய முடியும்? அதுவோ தந்திரம் மிகுந்தது, புலியின் எண்ணம் நரியிடம் பலிக்கவில்லை.

இவ்வள்வு கோபத்திற்கும் விரோதத்திற்கும் அந்த நாசமாய்ப் போன மந்திரி பதவி தான் காரணம். 'சிங்க ராஜாவுக்கு அடுத்தபடி வீரத்திலும் தீரத்திலும் நான் தான் சமமானவன் ஆதலால் எனக்கு தான் மந்திரி பதவி உரியது' என்று நினைத்து அந்த பதவிக்கு வர எவ்வளவோ முயற்சிகளெல்லாம் செய்து பார்த்தது புலி. எல்லா மிருகங்களை காட்டிலும் தந்திரத்திலும், சாமர்த்தியத்திலும் நரி தான் பெரியது என்று நினைத்தன அந்த காட்டிலுள்ள மிருகங்கள்.

நரி, மந்திரி பதவிக்கு வந்து ஏறக்குறைய ஆறு மாதம் தான் இருக்கும். இந்த சொற்ப காலத்திற்குள்ளாகவே எவ்வளவோ அரிய பெரிய காரியங்களையெல்லாம் செய்து முன்னிலும் அதிகமாக மிருகங்களின் நட்பைப்பெற்று விட்டது நரி.

ஒரு நாள் புலி சிங்கத்தினிடம் சென்று, "அரசே! நான் மந்திரி பதவி ஏற்று தங்களுக்கு தொண்டு செய்ய வேண்டுமென்று நெடு நாளாய் எண்ணி இருந்தேன். என் எண்ணத்தை அந்த நரி பாழாக்கி விட்டது மன்றி, என்னைக் கண்ட போதெல்லாம் கேலி செய்கிறது" என்று புகார் பண்ணியது.

சிங்கம் சிரித்து, "நண்பா! நீ தான் நான். நான் தான் நீ. என்பதை, நீ இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. உனக்கு உத்தியோகம் எதற்கு? இன்று முதல் நீ என்னுடனேயே இரு. நரி உன்னை எப்படி கேலி செய்கிறதென்பதைப் பார்க்கிறேன்" என்றது.

அதைக் கேட்ட புலிக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. நரியை வஞ்சம் தீர்க்க சமயம் வாய்த்தது என்று நினைத்து அன்று முதல் ஒரு நிமிஷமும் சிங்கத்தை விட்டுப் பிரியாமல் இருந்தது. நரி செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் செய்ய விடாமல் தடுத்து வந்தது. அதைக் கண்ட நரி சிங்கத்தினிடம் சென்று முறையிட்டது. சிங்கம் நரியின் மீது சீறி விழுந்தது. நரிக்குத் தன் உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்து விட்டு, சிவனே என்று எங்கேயாவது உட்கார்ந்து விடலாமா என்று தோன்றியது. ஆனால் தன் விரோதியான புலியை தொலைக்காமல் ராஜிநாமா செய்வது சரியல்ல, என்று நினைத்து, சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தது.

ஒரு நாள் நரி தன் உத்தியோக அறையில் உட்கார்ந்திருந்தது. அப்பொழுது காண்டாமிருகம் அங்கு வந்தது. நரி அதை நோக்கி, "காண்டா மிருகமே! நாளை நமது ராஜாவின் பிறந்த நாள். அதை முன்னிட்டு ஒரு கூட்டம் நடத்த வேண்டும். ஆதலால் கிழக்குக் கோடி மைதானத்தை சுத்தம் செய்து அரசர் உட்கார ஒரு மேடை தயார் செய்து விட்டு, நம் காட்டிலுள்ள மிருகங்களையெல்லாம் நாளைக் கூட்டத்திற்கு வரும்படி சொல்லி விடு" என்றது.

மறு நாள் மாலை நாலு மணிக்கு முன்னதாகவே, மிருகங்களெல்லாம் மைதானத்தை அடைந்து அரசரின் வரவை எதிர் பார்த்து கொண்டிருந்தன. ஐந்து மணிக்கு நரி முன்னும் சிங்கமும் புலியும் பின்னுமாய் வந்து மேடை மீது அமர்ந்தன. நரி மேடை மீது நின்று மிருகங்களை நோக்கி "நண்பர்களே! இன்று இக் கூட்டத்தை கூட்டினதற்கு இரண்டு காரணங்களுண்டு. ஒன்று அரசரின் பிறந்த தினத்தை கொண்டாடுவதற்கு; மற்றொன்று புலியின் கபட எண்ணத்தை வெளிப் படுத்துவதற்கு. நமது அரசர் வெளுத்ததெல்லாம் பாலென்று நினைத்து புலியை உயிருக்கு உயிராக மதித்திருக்கிறார். புலியோ சமயம் பார்த்து அரசரைக் கொன்று விட அரசப் பதவியை அபகரிக்க எண்ணியிருக்கிறது" என்றது.

அதைக் கேட்ட புலிக்கு கோபம் பிறந்தது. சிங்கம் நரியை நோக்கி, "புலியைப்பற்றி நீ இன்னொரு முறை இம்மாதிரி பேசினால், உன் நாக்கை அறுத்து விடுவேன் ஜாக்ரதை" என்றது.

நரி, "அரசே! என் மீது கோபிக்காதீர். அரசரைக் காப்பது மந்திரியின் கடமை. புலியின் கபட எண்ணத்தை ஆதாரத்துடன் நிரூபிக்கிறேன்." என்று சொல்லி, புலியைக்கொஞ்ச தூரம் அழைத்துச் சென்று அதன் காதோடு காதாகப் பேசியது. புலியும் அதற்கு சம்மதித்ததைப் போல் தலையை அசைத்தது. பிறகு புலியைமேடைக்கு அழைத்து வந்து, "அரசே, புலியிடம் உங்களைப்பற்றிய ஒரு ரகசியத்தை சொல்லியிருக்கிறேன். புலி அந்த் ரகசியத்தை மறைக்காமல் சொல்லி விட்டால் அப்பொழுது தான் அது தங்களுக்கு உண்மையான தோழன்" என்றது நரி.

சிங்கம், "புலியாரே! நரி சொன்ன ரகசியம் என்ன என்றது. அதைக் கேட்ட புலிக்குத் தூக்கி வாரிப் போட்டது." அது "ஒரு ரகசியத்தையும் சொல்லவில்லையே" என்றது.

அப்பொழுது கூட்டத்தின் மத்தியில் உட்கார்ந்திருந்த ஒட்டைச் சிவிங்கி தன் தலையை உயர தூக்கி "புலியாரே! நரி தங்களிடம் என்னமோ சொல்லிற்று. நீயும் அதற்கு தலையை அசைத்தாய், அப்படியிருக்க ஒன்றுமில்லையென்று ஏமாற்றப் பார்க்கிறுயே" என்றது.

பிறகு சிங்கம் எத்தனை முறை கேட்டும், புலி சொல்ல முடியாமல் திகைத்தது. சிங்கத்திற்கு கோபம் வந்தது. "இனி ஒரு நிமிஷமும் இந்த காட்டில் இருக்கக் கூடாது" என்று சொல்லி புலியை விரட்டிவிட்டது.

மறு நாள் ஒட்டைச் சிவிங்கி நரியிடம் வந்து, "மந்திரியாரே! உமது விரோதியைத் தந்திரமாய் விரட்டி விட்டீரே. தாங்கள் புலியிடம் சொன்ன் விஷயம் தான் என்ன" என்றது.

நரி, "அதுவா? புலியிடம் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அதன் காதோரமாய் வாயை வைத்துப் பேசுவதைப் போல் நடித்து அதன் காதைக் கிள்ளிவிட்டேன். வலி பொறுக்காமல் அது தலையை அசைத்தது. பார்ப்பவர்களுக்கு 'நான் ஏதோ சொன்னதைப் போலவும், அது சம்மதித்துத்தலையை அசைத்ததைப் போலவும் இருந்தது" என்றது. அதைக் கேட்ட ஒட்டைச் சிவிங்கி மந்திரியின் மதியைக் கண்டு சந்தோஷமடைந்தது.

தமிழ் நூல்கள்

சாணக்கிய சாஸ்திரம்	0	4
நவரத்னலாகெட்	0	10
கலா சேகரன்	1	2
லோகமான்ய திலகர்	0	8
குழந்தைக்கட்டி	1	4
உலகாக்சியம்	1	0
ஜலாம்பிகை	2	4
இரஞ்சிதமாலா	0	8
ஜகஜ்ஜாலன்	1	12

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

நாங்கள்

501

ஸ்பெஷல்தான் உபயோகிக்கிறோம் - ஏனென்றால்,

மிருகக் கொழுப்பற்றது

501 ஸ்பெஷலைத்தவிர 501 வாஷிங்ஸோப்பு ஒன்றும் உள்ளது. அதன் விலை இன்னும் குறைவு. நம் வீட்டில் எல்லா அவசியங்களுக்கும் தகுந்த ஸோப்பு. கியூபுகளாகவும், நீளக் கட்டிகளாகவும், வில்லைகளாகவும் சீவல்களாகவும் எல்லாப் பெரிய கடைகளிலும் கிடைக்கும். 501 ஸ்பெஷல் வில்லைகளாக 3 சைஸ்களில் பெட்டிகளில் பாக் செய்து விற்கப் படுகிறது.

டாம்கோ விற்பனை இலாகா :
1, வாரன் ரோட், பீமன்பேட், மைலாப்பூர், மதராஸ்.
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்.

FS. 1948.

இருமல், சுவாசகாசம் தொண்டை புண்ணுக்கு நேரடியான நிவாரணி.

——(*)——

தொண்டைக்கு உபத்திரவமளிக்கும் கிருமிகளை சுவாசிப்பது போல் அதைஎதிர்க்க அதற்கான நிவாரணியையும் சுவாசிக்க வேண்டும். நேரடியான நிவாரணிக்கு பெப்ஸ் சிறந்ததாகும்.

வாயில் கரைந்தவுடன் மருந்து பூர்வமான ஆவி, சுவாசத்துடன் கலந்து படத்தில் காணப்படுவது போல் சுவாசப்பைக்குச் செல்லுகின்றது. (1) திரவ ரூபமான மருந்துகள், குடலுக்குத்தான் செல்லுகின்றன. (2) இதனால் பெப்ஸ் தொண்டைக்கு சமனமூட்டி, சுலபமாக சுவாசிக்கஉதவி, கடுமையான இருமல், ஜலிப்பு, சுவாசகாசம், முதலியவற்றை குணப்படுத்தும் எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1 வீதம் விற்கின்றனர். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி. பார்க் டவுன், மதராஸ்.

எப்பொழுதும்பெப்ஸ்உட்கொள்ளுங்கள்

PEPS

கிருமிநாசக சுவாச மாத்திரைகள்.

தலையில்

தலைமயிர் தெரிகிறதா அல்லது அடித்தலை தெரிகிறதா அடித்தலை புலப்படும் பக்ஷத்தில், உதிர்ந்த கேசராசிகளுக்குப் பதில் புதுக்கூந்தல் முளைக்கவில்லை என்பது நிச்சயம். அச்சமயம் கேசவர்த்தினியைக் கொண்டு பரிஹரிக்காமல், பாதி வழுக்கையைப் பூரண வழுக்கையாக விடுவானேன்? வழுக்கையால் ஏற்படும் கிழத்தோற்றத்தையும் அனுபவிப்பானேன்?

உதிர்ந்த இலைகள் மறுபடி முளைத்துவிடும். ஆனால் சில சமயங்களில் உதிர்ந்த கூந்தல் சிகிச்சையில்லாமல் முளைப்பதில்லை. அச்சமயங்களில் கேசவர்த்தினியை உபயோகித்து மயிர் உதிர்வதை நிறுத்தி இளங்கூந்தலையும், இளமையையும் ஒருங்கே பெறுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக்காப்பது; விருத்திசெய்வது; அழகுபடுத்துவது விலை அணு 12; மேற்செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.



கே.சுவாமிநாதன்&கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மல, சுகாய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.



பிராஞ்சு:- பேனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி வியாதிகளுக்கு
ஜம்மி வெங்கடரமணய்யாவின்
"லிவர்க்யூர்"
நோட்டீஸ்.

கீழ்க்கண்ட இடங்களுக்கு விஜயம் செய்யும் எமது வைத்திய ஆலோசகரை, ஈரல் பெருக்கம், குலைக்கட்டி வியாதிகளுக்கு அந்தந்த தேதிகளில் நேரில் ஆலோசனை பெறலாம்.

ஆலோசனை நேரம் : காலை 9 முதல் 12 மணி வரை.
பிற்பகல் 3-30 முதல் 6-30 வரை.

திருச்சினுப்பள்ளி—நவ.	9 & 10. —	லிவர்க்யூர் பிராஞ்சு ஆபீஸ், 17, தோடிக் கடைத்தெரு, தெப்பக்குளம்.
மதுரை —,,	12 & 13. —	Mr. டி. என். வி. நாகலிங்கம் பிள்ளை, கெமிஸ்ட், வடக்கு சித்திரை வீதி.
திருவனந்தபுரம் —,,	15 & 16. —	M/S. C. அருணாசலம் & கம்பெனி, கெமிஸ்ட் & டிரக்கிஸ்ட்ஸ், புத்தன் சந்தை.
நாகர்கோயில் —,,	18.	Mr. N. திரவியம், கெமிஸ்ட்.
திருநெல்வேலி —,,	20 & 21. —	"சந்திர விலாஸ்" திருநெல்வேலி ஜங்ஷன்.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்,
சப் ஆபீஸ் — கும்பகோணம்.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்கரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட் போஸ்டு, S.I.R.

அரிய தமிழ் நாவல்கள்.
வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியது.

	ரூ.	அ.
வைதேகி	2	8
பத்மசுந்தரன்	2	8
சாருலோசனு	2	8
காதலின் கனி	2	8
ராதாமணி	2	8
தியாகக் கொடி	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0
சாமளநாதன்	2	0

சுதேசமித்திரன்
புத்தகசாலை, சென்னை.